திருக்கோவையார்ச் சிறு
சித்திரட்

V211,2147M79
N49
[illegible] 5 .5[illegible]

# முகவுரை

எந்த விஷயத்தையும் உபமான மூலமாகச் சொல்வதில் எப்பேர்ப்பட்டவர்க்கும் விஷயம் தெளிவாகப் புரிகிறது. இந்நாளில் அந்த வித்தையை மிகவும் திறமையாகக் கையாள்பவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஒருவரே.

அவர் கையாளும் உவமைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. மையானவை. எத்தகைய சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமானவை. உலகம் இதுவரை கண்டிராதவை. அவரது யாகிற உத்தியானவனத்தில் அவ்வப்போது புதிதாய்ப் பூக்கும் நறுமணப்பூக்கள். வண்டுகள் பூக்களிடையே ள்ள தேனைப் பருக எத்தனை அவாவோடு விரைந்தோடி வருகின்றன! அதைப்போன்றே தேசபக்தர் குழாம்கள் இவ்வுவமைகளில் உள்ள சுவையைப் பருக போட்டி போட்டுக்கொண்டு முன் வருமா!

பருகினால்மட்டும் போதாது. அவைகளை நன்றாய் ஜீரணித்துக்கொள்ளவேண்டும். பிறகு அவைகளின் உட்பொருளை மக்கள் உணரும்படிச் செய்யவேண்டும். அவ்வுவமைகள் தேசிய, சமூக, பொருளாதார விஷயங்களைக் ...த்தனவா யிருக்கின்றன. எவ்வளவு சிக்கலான விஷயங் சரிவர, தெளிவாகவும் சுவாரஸ்யமாகவும் எடுத்துரைக் முக்கியம். அறிவு வளர்ச்சிக்கு மிகவும் உதவியாயுள்ளன.

ஆதலால் அவைகளை மக்களிடையே பரப்புவது சிறந்த தேசத் தொண்டாகும். தேசபக்தர்கள் கவனிப்பார்களா?

இதை அச்சிட்டு வெளிக்கொணர பேருதவியாயிருந்த வேலம் மிராசுதார் வ. வி. குப்புசாமி செட்டியார், சென்னை பிரபல புத்தக வியாபாரி பி. ரங்கசாமி நாயகர், தண்டையார்பேட்டை வி. என். குமாரசாமி தம்பதிகள், பரலி சு. நெல்லையப்பர் முதலானோர்க்கும், முக்கியமாக ராஜாஜியின் குமாரர் நரஸிம்மன் அவர்களுக்கும் எனது நன்றியதலை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை
20—3—41

ஆக்கூர் அனந்தாச்சாரி.

# இராஜகோபாலாச்சாரியார் சரித்திரம்

## ஸ்ரீ. ராமானுஜரின் பெருந்தன்மை

இந்நாட்டிலே வைஷ்ணவ சிந்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்காக சுமார் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஸ்ரீராமானுஜர் தோன்றினார். அவர் கிரமப்படி ஓர் குருவை அடுத்து அன்னாரிடம் உபதேசம் பெற்றார். மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைவதற்கான மந்திரத்தையும் குருவினிடமிருந்து கற்றுக்கொண்டார். தான்மாத்திரம் மோக்ஷத்தையடைய அவர் விருப்பங் கொள்ளவில்லை. ஜாதிமத வித்தியாசமின்றி எல்லோரும் அனுபவிக்கட்டும் என்ற நல்லெண்ணத்துடன், கோயில் கோபுரத்துமீது ஏறிக்கொண்டு குரு சொல்லிக்கொடுத்த மகாமந்திரத்தை எல்லோருக்கும் உபதேசித்தார். அத்தகைய பெரும் மனது படைத்தவர் ஸ்ரீராமானுஜர்.

அவர் நாடுபூராவும் பிரயாணம் செய்து அங்கங்கே வைஷ்ணவத்தைப்பற்றி தீவிரப்பிரசாரம் செய்தார். 74 சிம்மாஸனாதிபதிகளை ஏற்படுத்தி, அவர்கள் மூலம் காரியங்களை சரிவர நடத்திவந்தார். அந்த சிம்மாஸனாதிபதிகளில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவர் வரதாச்சாரியார் என்பவர்.

## ‘சக்கரவர்த்தி’ பட்டம் வந்த வரலாறு

ஓர்நாள் வழக்கம்போல் ஸ்ரீராமானுஜர் தமது சீடர்களுக்கு ஸ்ரீமந் நாராயணனின் திவ்ய குணங்களைப்பற்றி காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தார். அத்தனை சீடர்களிலும் வரதாச்சாரியாரே மிகவும் பக்திசிரத்தையுடன் காலக்ஷேபத்தைக் கேட்கிறாரென்பதை ஸ்ரீராமானுஜர் அறிந்துகொண்டார். அதற்காக மனமுவந்து ‘சக்கரவர்த்தி’ என்கிற பட்டத்தை அவருக்குத் தந்தருளினார். இது மற்ற சீடர்களுக்குப் பிடிக்கவில்லை. வரதாச்சாரியாரை மாத்திரம் அவ்வாறு கௌரவிக்கவேண்டியதின் காரணத்தை குருவினிடம் அவர்கள் கேட்டனர். ஸ்ரீராமானுஜர் உடனே வரதாச்சாரியாரைக் கூப்பிட்டு தாம் அதுவரை செய்துவந்த உபதேசங்களையும், காலக்ஷேபாதிகளையும் சொல்லும்படி கட்டளையிட்டார். ஸ்ரீராமானுஜரைப் போலவே வரதாச்சாரியார் உணர்ச்சியோடு அவைகளை சொல்லிக்காட்டினார். மற்ற சீடர்கள் வரதாச்சாரியாரிடம் கொண்ட பொறாமையை விட்டொழித்து, அவரது தகுதியை அங்கீகரித்தனர். அது முதல் வரதாச்சாரியார் ‘சக்கரவர்த்தி’ என்ற பட்டப்பெயராலேயே அழைக்கப்பட்டு வந்தார்.

## அனாதப் பிரேத ஸம்ஸ்காரம்

அவர் ஒருநாள் காஞ்சீபுரத்தில் வேகவதி நதிக்கரையில் அமர்ந்து ஜபம் செய்து கொண்டிருந்தார். அச்சமயம் ஆற்றில் பிரவாகம் வந்துகொண்டிருந்தது. அந்தப்பிரவாகத்தில் ஓர் பிணம் மிதந்து வருவதைக்கண்டார். அப்பிணத்தின் இருபுஜங்களிலும் சங்குசக்கரத் தழும்புகள் காணப்பட்டன. உடனே ‘சக்கரவர்த்தி’ ஸ்வாமி ஜபத்தை நிறுத்திக்கொண்டு தமது சீடர்களைக் கூப்பிட்டு “அதோ ஒரு வைஷ்ணவ மகானின் திருமேனி பிரவாகத்தில் போகிறது. அதைக் கொண்டு வாருங்கள்” என்றார். சிஷ்யர்களில் ஒருவன் ஆற்றில் குதித்து நீந்தி அந்தத் திருமேனியைக் கரையில் கொண்டு வந்து சேர்த்தான்.

‘சக்கரவர்த்தி’ ஸ்வாமி பிணத்தின் ஜாதியைப் பற்றி கவலை கொள்ளவில்லை. சீடர்கள் மூலம் யாருக்கோ சொல்லியனுப்பி, பணம் வரவழைத்தார். ஓர் புத்திரன் தகப்பனுக்கு எவ்வாறு செய்வானோ, அதேமாதிரி அந்த அனாதைப் பிரேதத்திற்கு ஸம்ஸ்காரம் செய்தார்.

தனக்கிரியைகளை நடத்திவிட்டு ‘சக்கரவர்த்தி’ ஸ்வாமி தமது பர்ணசாலை வந்தடைந்தார். அதற்குள் அவர் செய்த காரியம் ஊர் முழுதும் பரவிவிட்டது. ‘சக்கரவர்த்தி’ ஸ்வாமிக்கு விருத்தாப்பியத்தினால் புத்தி பிசகி விட்டதென்றும் பைத்தியம் பிடித்து விட்டதென்றும் பிராம்மணர்கள் நினைத்தார்கள். அவரோடு எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாமல் பிராம்மண சமூகம் அவரை அடியோடு பகிஷ்கரித்தது.

## பிணத்தைக் கௌரவிப்பது மனுஷ்ய தர்மம்

பிணத்திற்கு ஏனைய மதத்தினரும் மரியாதை செலுத்துகின்றனர். கிருஸ்துவர்கள் ஏதேனுமொரு பிணத்தைக் கண்டால் தலையில் அணிந்திருக்கும் தொப்பியை எடுத்து வணங்குகின்றனர். மகம்மதியர்களோ பிணத்தைக் காணும் போது கொஞ்ச தூரம் அதைத் தொடர்ந்து நடந்து செல்கின்றனர். தங்கள் உதவி தேவையில்லை என்று தெரிந்த பிறகே தங்கள் வேலையை கவனிக்கத் திரும்புகின்றனர். ஹிந்துக்கள் இது விஷயத்தில் இன்னும் தாராளமான மனப்பான்மையுடன் இருக்கின்றனர். ஒரு வீட்டில் சாவு என்றால், எல்லோரும் ஒன்று சேர்ந்து பிணத்தை அப்புறப்படுத்துவதில்

தேகத்தாலும் பொருளாலும் உதவி செய்கின்றனர். இது மனுஷ்ய தர்மம்.

ஒருவன் இறந்த பிறகும் ஜாதி மதம் பாராட்டுவது சரியல்ல. முக்கியமாக அனாதைப் பிணங்களுக்கு வேண்டிய கிரியைகளை நடத்துவது மிகவும் புண்யகரமான செய்கை. அதனால் அசுவமேத யாக பலன் கிட்டும் என்று சாஸ்திரம் கூட முறையிடுகின்றது.

"அனாதைப் பிரேத ஸம்ஸ்கார அஸ்வமேத பலன் லபேத்" என்கிற சுலோகமே அதற்கு சாக்ஷி.

தாம் அதை அனுசரித்தே அனாதைப் பிரேத ஸம்ஸ்காரம் செய்ததாயும், தாம் செய்ததில் தவறொன்றுமில்லை யென்றும் 'சக்கரவர்த்தி' ஸ்வாமி சொன்னார். பிராம்மணர்கள் காதில் அது ஏறவில்லை. பகிஷ்காரம் முற்றியது. 'சக்கரவர்த்தி' ஸ்வாமி எப்போதும்போல் வரதராஜப் பெருமாள் சன்னதிக்கு எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றார். அங்கிருந்த கோயிலதிகாரிகள் அவரைத் தடுத்தனர். "எனக்கெல்லாம் தெரியும். சாஸ்திரம் தெரியாதவனல்ல நான்" என்றார் 'சக்கரவர்த்தி.'

'சக்கரவர்த்தி' ஓர் சிறந்த மகான், என்பதை ஏற்கனவே அறிந்தவர்களாதலால், மறு வார்த்தை கூறாமல் கோயில் அர்ச்சகர்கள் அவரை சன்னதிக்குள் செல்ல அனுமதித்து விட்டனர்.

## 'நாட்டுக்குப் பொல்லான் ; நமக்கு நல்லான்'

ஜாதிப் பிரஷ்டரான 'சக்கரவர்த்தி' ஸ்வாமி, வரதராஜப்பெருமாள் சன்னதியில் நுழைந்து விட்டார் என்ற செய்தி ஊர் முழுதும் பரவி விட்டது. எங்கு பார்த்தாலும் ஏகபுரளி. கோயில்வாசலில் கும்பல் கூடிவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் வரதராஜப் பெருமாளின் விக்கிரகம் இருந்த



இடத்திலிருந்து ஓர் த்வனி கிளம்பியது. சேவித்துக் கொண்டிருந்த சக்கரவர்த்தி ஸ்வாமியைக் குறித்து, "நீர் நாட்டுக்குப் பொல்லான்; ஆனால் நமக்கு நல்லான்" என்றது அந்தக் குரல்.

இவ்வாறு பகவானே 'சக்கரவர்த்தி' ஸ்வாமியின் செய்கையை அங்கீகரித்ததால் வைதீகர்களுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. அவரது கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். அதுமுதல் 'சக்கரவர்த்தி' ஸ்வாமிக்கு 'நல்லான்' என்ற பட்டப்பெயர் ஸ்திரமாயிற்று. வரதாச்சாரியார் என்பதற்குப் பதிலாக 'நல்லான் சக்கரவர்த்தி' என்று அழைக்கப்படலானார்.

அத்தகைய பெரியாரின் வம்சத்தைச் சேர்ந்தவர் நமது சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

## குடும்ப வரலாறு

சேலம் ஜில்லாவில் ஹொஸ்ஸூர் என்று ஒரு கிராமம் உண்டு. அங்கு சக்கரவர்த்தி அய்யங்கார் என்கிற ஓர் வைஷ்ணவப் பிராம்மணர் இருந்து வந்தார். அன்னார் சிங்காரம்மாள் என்பவரை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். தொன்று தொட்டு தொரப்பள்ளி அக்கிரஹாரமே அக்குடும்பத்தின் பூர்வீக ஸ்தலமாயிருந்தது. நிலம்புலம் பொன்னா மட்டு கிராமத்தில் இருந்து வந்தன. சக்கரவர்த்தி அய்யங்கார் நிலத்தில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தை செவ்வனே நடத்தி வந்தார். அது தவிர அவர் கிராம முனிசீப் வேலையையும் பார்த்து வந்தார்.

## பிறப்பும் படிப்பும்

அன்னாருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. அவர்களுக்கு முறையே நரஸிம்மன், சீனிவாஸன், ராஜ

கோபாலன் என்று பேரிட்டனர் பெற்றோர்கள். அம் மூவர்களில் கடைக் குட்டியே நமது தலைவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் 1879-ம் வருஷ ஹொஸ்ஸூர் கிராமத்திலேயே பிறந்தார். முதலில் அவரைப் பெற்றோர் உள்ளூர் பள்ளியில் படிக்க வைத்தனர். அதன் பிறகு பெங்களூர் ஸெண்டரல் கல்லூரியிலும், சென்னை ராஜதானிக் கல்லூரியிலும் சேர்ந்து உயர்தரக் கல்வி கற்றார். ராஜதானிக் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு சட்ட கலாசாலையில் சேர்ந்து சட்டம் படிக்கலானார்.

## விவேகானந்தரின் தரிசனத்தால் ஏற்பட்டபலன்

அவர் சட்ட கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த சமயம், விவேகானந்த ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்தார். இராஜகோபாலாச்சாரியார் அப்போது திருவல்லிக்கேணி ஹைஸ்ஹவுஸில் இருந்த மாணவர் விடுதியில் தங்கியிருந்தார். அதிருஷ்டவசமாக விவேகானந்த ஸ்வாமிகளும் அதே விடுதியில் வந்து தங்கும்படி நேர்ந்தது. ஸ்வாமிகள் சென்னையில் பல்வேறிடங்களில் பிரசங்கங்கள் செய்தார். இராஜகோபாலாச்சாரியார் அதிக பக்தி சிரத்தையுடன் அவைகளனைத்தையும் கேட்டார். விவேகானந்த ஸ்வாமிகளின் தரிசனத்தினாலும், அவரது பிரசங்கங்களைக் கேட்டதினாலும் இராஜகோபாலாச்சாரியாரிடம் இயற்கையாக இருந்த தேச பக்தியும், தியாக உணர்ச்சியும் அதிகமாயின.

## வக்கீல்தொழிலும் விவாகமும்

பிறகு அவர் சட்டப் பரீக்ஷையில் தேறி வக்கீல் பட்டம் பெற்றார். தமது சொந்த ஊராகிய சேலத்திலேயே தொழில் ஆரம்பிக்க எண்ணங் கொண்டார். இதற்கிடையே அவரது பெற்றோர்கள் கமலாவை அவருக்கு விவாகம் செய்வித்தனர். இராஜகோபாலாச்சாரியாருக்கு அப்போது வயது இருபது கூட நிரம்பவில்லை.



அந்தக் காலத்தில் சேலத்தில் பிரசித்தி பெற்றிருந்த வக்கீல் ஒருவரை இராஜகோபாலாச்சாரியார் அணுகி, தம்மை ஜூனியராக வைத்துக் கொள்ளும்படிக் கேட்டார். அதற்கு சம்மதி கிடைக்காமற் போகவே, தாமே நேரடியாக யாருடைய உதவியுமின்றி வக்கீல் தொழிலில் இறங்கினார்.

தாம் ஆஜரான முதல் வழக்கிலேயே வெற்றியடைந்தார். அவ் வழக்கில் இராஜகோபாலாச்சாரியாருக்கு எதிராக, பிரபல வக்கீல் ஆஜராகி வாதித்தும் பயனில்லாமல் போய் விட்டது. ஆசாரியாருக்கு இருந்த சட்ட ஞானம், வாதத் திறமை, இவைகளைக் கண்டு வக்கீல்களும் நியாயாதிபதிகளும் ஆச்சரியப் பட்டனர். தொழில் சம்பந்தமான புகழை இவர் வெகு விரைவிலேயே அடைந்தார். அவருக்கு இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவின்றி மாதவருமானம் கிடைத்து வந்தது.

## சிறந்த சமூக சீர்திருத்தவாதி

இராஜகோபாலாச்சாரியார் சிறு பிராயத்திலிருந்தே உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை பாராட்டாதவர். அவ்வாறு செய்வது பாவமென நினைக்கக்கூடியவர். ஆகவே சமூகத்தில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களைப் போக்கடிக்க விரும்பினார். தீண்டாமையை ஒழிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். 1906-ம் ஆண்டில் சில ஹரிஜன மாணவர்களை சேலம் கலாசாலையில் சேர்த்தார். வைதீகர்கள் ஆசாரியாரை இச்செய்கைக்காக ஜாதிப் பிரஷ்டம் செய்தனர். வைதீகர்களின் ஆதரவைப் பெறாத

போதிலும் பொது மக்களின் ஆதரவை ஆசாரியார் பரிபூர்ணமாகப் பெற்றிருந்தார்.

## சேலம் நகரசபைத் தலைமைப்பதவி

1917-ம் வருஷம் சேலம் நகரசபைக்குத் தலைவராக பொதுஜனங்கள் ஆசாரியாரை தேர்ந்தெடுத்தார்கள். அப்பொழுது ஓர் சம்பவம் நடந்தது. அக்கிரஹாரத்தில் உள்ள தண்ணீர்க் குழாய்களைத் திறந்து மூட, ஹரிஜனச் சிறுவர்களை நகரசபை அனுப்பியது. அது வேணுமென்றே செய்த காரியமல்ல. தற்செயலாய் நேர்ந்த விஷயம். ஆயினும் இதை எதிர்த்து வைதீகர்கள் கிளர்ச்சி செய்தனர். நகரசபைத்தலைவரான ஆசாரியாரிடமும் வைதீகர்கள் இது விஷயமாக முறையிட்டுக் கொண்டனர். அவர்களது வேண்டுகோளுக்கிணங்குவது, ஜாதிபேதத்தை ஸ்திரப்படுத்துவதற்கு ஒப்பாகும் என்று ஆசாரியார் பதிலளித்து விட்டார். இந்த பதிலைக்கேட்டு வைதீகர்கள் கடுங்கோபங் கொண்டனர். இது சம்பந்தமாக சேலம் நகரசபையில் கண்டனத் தீர்மானமும் வந்தது. சட்டத்திற்குப் புறம்பானது என்று சொல்லி ஆசாரியார் அதை நிராகரித்து விட்டார்.

ஆசாரியார் நகரசபைத் தலைவராயிருந்தபோது தமக்குள்ள அதிகாரத்தை ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்ததில்லை. லஞ்சம் தலைகாட்டாமல் தடுத்தார். மதுபானக் கடைகள் சேலம் நகருக்குள் இருக்கக்கூடாதென உத்திரவு போட்டார். சேலம் நகரத்தை விரிவுபடுத்தினார். நகர மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். அரசாங்கத்தையும் அவர் மறந்து விடவில்லை. அப்போது நடந்து கொண்டிருந்த மகாயுத்த சம்பந்தமாக அரசாங்கத்துக்கு மிகவும் உழைத்தார்.



## சமபந்திபோஜனமும் வைதீகர்களின் தீவிர பகிஷ்காரமும்

சிதம்பரம் நந்தனார் கழக ஸ்தாபகரான சுவாமி சகஜானந்தர் என்கிற ஹரிஜன சன்னியாசி 1917-ம் வருடம் சேலம் சென்றார். அவரை ஆசாரியார் நன்கு அறிவாராதலின் அன்னாரை அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவருக்கென வக்கீல் ஸி. அனந்தாச்சாரியார் வீட்டில் ஓர் விருந்தும் வைக்கப்பட்டது. பல பிரமுகர்கள் சமபந்தி விருந்தில் கலந்து கொண்டனர். "இதென்ன அக்கிரமம்! இப்படி எங்கேயாவது நடக்குமா?" என்று வைதீகர்கள் வாய் விட்டலறினர். ஆசாரியாரும் அவருக்குப் பக்கபலமாயிருந்த நண்பர்களும் அறவே பகிஷ்கரிக்கப் பட்டனர்.

இவ்வாறெல்லாம் கஷ்டங்களை மேற்கொள்ள நேரிடுமென்று ஏற்கனவே நன்கு அறிந்த அறிவாளிகளாதலால் ஆசாரியார் கோஷ்டியினர் வைதீகர்களின் பகிஷ்காரத்தினால் தங்கள் உறுதியை இழக்கவில்லை. வைதீகர்களின் தயவில்லாமலேயே காரியங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தனர். சாவு வாழ்வுக்கான சடங்குகளையும், திவசம் திங்கள், நடத்தவும் மந்திரம் கற்றனர். அதை உபயோகப் படுத்துவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் வராமற்போகவில்லை. வைதீகர்களால் பகிஷ்கரிக்கப்பட்டவர்களில் ஒருவரான எஸ். வி. சுப்பிரமணிய அய்யரின் உடன்பிறந்தாள் உயிர் துறந்தார். சேலம் கலாசாலை பிரின்ஸிபால் எக்ஞநாராயணய்யரே பிரேத ஸம்ஸ்காரங்களைச் செய்துவைத்தார். வைதீகர்களின் பகிஷ்கார மிரட்டல் ஆசாரியார் கோஷ்டியினரை சிறிதும் பணிய வைக்கவில்லை. வைதீகர்களின் உதவியின்றியே காரியங்களெல்லாம் சரிவர நடந்துவந்தன.

## பெரியவிடத்து சாகவாஸம்

ஆசாரியார் அக்காலத்தில் உடைகளுக்காக ஏராளமாகச் செலவழிப்பார். ஆனால் உடை சுத்தமாயிருக்குமே ஒழிய பகட்டா யிருக்காது. பணக்காரர்களும், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களுமே இவரது சிநேகிதர்களா யிருந்துவந்தனர். சேலம் மெஸானிக் லாட்ஜில் சேர்ந்து வெகுகாலம்வரை முக்கிய மெம்பரா யிருந்தார். பிற்காலத்தில் இவர் அரசியலில் ஈடுபட்டதின் காரணத்தால் ராஜத்துரோகியெனக் கருதப்பட்டார். ஆகவே பல மெம்பர்கள் ஆக்ஷேபிக்க இவர் பெயர் நீக்கப்பட்டது.

## ஆசாரியார் ஒருவனைச்சுட்டு காயப்படுத்துதல்

ஒருசமயம் ஆசாரியார் ஒரு வழக்கில் ஆஜராவதற்காக வெளியூருக்குப் போகவேண்டி யிருந்தது. சேலம் ஜில்லாவில் சில பாகங்களில் ரயில் போடாத சமயம் அது ஆகையால் ஆசாரியார் ஜட்கா வண்டியில் பலமைல்தூரம் போக நேரிட்டது. வழியில் டோல்கேட்டில் சிலர் ஜட்காவை வேகமாகத் தொடர்ந்து வந்தார்கள். 'பணம்கொடு' 'பணம் கொடு' என்று அதட்டிய குரலில் கேட்டுக் கொண்டே வந்தார்கள். அவர்கள் ஒருவேளை வழிபறிக் கொள்ளைக்காரர்களா யிருப்பார்களோவென்று ஆசாரியார் நினைத்தார் போலும்! தம்மிடமிருந்த துப்பாக்கியை அவர்களிடம் காட்டி, இனியும் வண்டியைத் தொடர்ந்து வந்தால் சுட்டுவிடுவதாக பயமுறுத்தினார். அவர்கள் மேலும் தொடர்ந்துவரவே சுட்டேவிட்டார். ஒருவன் படுகாயமடைந்து கீழே விழுந்தான். மற்றவர்கள் இருந் விடம் தெரியவில்லை. உடனே ஆசாரியார் வண்டி நிறுத்தி, காயமடைந்தவனைத் தூக்கி வண்டியில் பே கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்வித்



## காந்தி—திலகர் மீது அளவற்ற அன்பு

ஆசாரியார் வக்கீல் தொழில் செய்யும்போதே காந்தியடிகளின் புகழ் அவர் காதுக் கெட்டியது. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் அப்போது நடத்திய சத்தியாக்கிரகச் செய்திகள் இவர் மனதைக் கவர்ந்தன. காந்தியடிகள் எழுதிவந்த நூல்களையும் வியாசங்களையும் படிக்கலானார்.

லோகமான்ய பாலகங்காதர திலகரை தமது அரசியல் குருவாக மதித்து வந்தார். சூரத் காங்கிரஸுக்குச் சென்ற தீவிரவாதிகளில் நமது ஆசாரியாரும் ஒருவர்.

## மனைவியின் மரணமும் அரசியலில் ஈடுபடுதலும்

அரசியலில் அதிக பங்கெடுத்துக் கொள்ள விரும்பி ஆசாரியார் சேலம் நகரசபைத்தலைவர் பதவியை . ராஜிநாமா செய்தார். அதற்கடுத்தாற்போல் ஆசாரியாரின் மனைவியாருக்கு காசநோய் வந்தது. அவர் 1917-ம் வருடம் காலகதியடைந்தார்.

## சென்னைக்கு ஜாகை மாற்றுதல்

அப்போது சென்னை 'ஹிந்து' பத்திரிகாசிரியரான ஸ்ரீ. கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலியோரின் யோசனையின் பேரில், 1918-ம் வருஷம் ஆசாரியார் சென்னை மைலாப்பூரில் வந்து தங்கி, ஹைகோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்தலானார். இச்சமயத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடு மீது ராஜத்வேஷ வழக்கு மதுரையில் நடந்து கொண்டிருந்தது. ஆசாரியார் டாக்டர் நாயுடுவுக்காக ஆஜராகித் திறமையாக வாதித்து விடுதலை பெறச் செய்தார்.

Acc. No. 739
dt 24.11.77

## ஆசாரியாரின் அடக்கம் காந்தியின் மனதைக் கவருதல்

1919-ம் வருஷம் காந்தியடிகள் ரௌலட் சட்டத்தை உடைத்தெறிய யோசனை செய்து கொண்டிருந்தார். அது சம்பந்தமாக இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்னைக்கும் விஜயம் செய்தார். அவர் தங்கியிருந்த பங்களா கஸ்தூரி ரங்கய்யங்காருக்குச் சொந்தமானது. ஆகையால், தாம் அவருடைய விருந்தினரென்றே எண்ணியிருந்தார் காந்தி. அந்த பங்களாவில் குடியிருப்பவர் இராஜகோபாலாச்சாரியார் என்பது காந்தியடிகளுக்குத் தெரியாது. பின்பு வெகுநேரம் கழித்தே உண்மை வெளிப்பட்டது. தாம் இராஜகோபாலாச்சாரியாருடைய விருந்தாளியே என்பதை காந்தியடிகள் அறிந்து கொண்டார். இவ்விஷயமாக ஆசாரியார் தன்னடக்கத்துடன் நடந்து கொண்டதைக்கண்டு காந்தியடிகள் மிகவும் ஆச்சரியமடைந்தார். ஆசாரியாரின் அரியகுணம் காந்தியடிகளின் மனதை ஒரு நொடியில் கவர்ந்து விட்டது. ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளத் தலைப்பட்டனர்.

## சத்தியாக்கிரக தத்துவத்தை நன்கு அறிதல்

அன்றே தலைவர்களின் மகாநாடொன்று அதே பங்களாவில் கூட்டப்பட்டது. சத்தியாக்கிரகத்தின் தத்துவங்களைப் பற்றி காந்தியடிகள் தலைவர்களுக்கு விவரித்துக் கூறினர். அநேகருக்கு ஒன்றும் சரியாய் விளங்கவில்லை. ஆனால் ஆசாரியாரோ ஒரு நொடியில் கிரகித்துக் கொண்டு மற்றவர்களுக்கு விவரிக்கலானார். ஆசாரியாரைக் காரியதரிசியாகக் கொண்ட ஓர் சத்தியாக்கிரக சபை சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டது. ரௌலட் சத்தியாக்கிரகமும், அதன்



விளைவாக நடந்த பஞ்சாப் படு கொலையும், ஒத்துழையாமை இயக்கத்தை தோற்றுவிக்கும்படி காந்தியடிகளைத் தூண்டின.

## ஒத்துழையாமைத் திட்டத்திற்கு ஆசாரியார் பரிபூர்ண ஆதரவு அளித்தல்

1920-ம் வருஷம் கல்கத்தாவிலும், நாகபுரியிலும் நடைபெற்ற காங்கிரஸ்களில், ஆசாரியாரின் தீவிர முயற்சியால் காந்தியடிகளின் ஒத்துழையாமைத்திட்டம் நிறைவேறியது. ஆசாரியார், அவ்வருடம் அகில இந்திய காங்கிரஸின் பொதுக்காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தமிழ்நாடு முழுதும் சுற்றி ஒத்துழையாமைத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார். அவரது பிரசாரத்தின் பலனாக தமிழ்நாட்டில் பள்ளி கலாசாலைவிட்ட மாணவர்களும், கோர்ட்டைவிட்ட வக்கீல்களும் கணக்கிலடங்கார்.

## ஆசாரியாரின் முதல் சிறைவாசம்

வேலூரில் ஆசாரியாருக்கு 144-வது பிரிவு தடை உத்திரவு சாதரா செய்யப்பட்டது. அதை அவர் மீறவே 1921௵ டிசம்பர்௴ 21உ மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனைபெற்று வேலூர் சிறையில் வைக்கப்பட்டார்.

## சட்டமறுப்பு விசாரணைக்கமிட்டி

ஆசாரியார் விடுதலையாகி வெளிவந்ததும் நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்டார். அப்போது பொதுஜன சட்டமறுப்பு நிறுத்தப்பட்டிருந்தது. மகாத்மாவும் சிறைபுகுந்தாய்விட்டது. ஸி. ஆர். தாஸும்,

வித்தல்பாய் பட்டேலும், சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டுமென்றனர். நாட்டின் உண்மையான நிலைமை அறிந்து கொள்ள 'சட்டமறுப்பு விசாரணைக்கமிட்டி' யொன்றை ஏற்படுத்தி, அது நாடுபூராவும் சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டுமென அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பண்டித மோதிலால்நேரு, ஜம்னுலால் பஜாஜ், இராஜகோபாலாச்சாரியார், சேத் சோடானி, டாக்டர் அன்சாரி, விட்டல்பாய் பட்டேல், ஆகிய ஆறுபேர் அக்கமிட்டியின் அங்கத்தினர்கள். சோடானி, பஜாஜ் இவர்களுக்குப் பதிலாக ஹக்கீம் அஜ்மல்கானும், கஸ்தூரிரங்கய்யங்காரும் கமிட்டில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். அக்கமிட்டி நாடு பூராவும் சாக்ஷியம் சேகரித்து, சட்டமறுப்பைக் கைவிடும்படி கடைசியில் 'சிபார்சு செய்தது. ஆனால் சட்டசபைப் பிரவேசத்தை அன்சாரி, இராஜகோபாலாச்சாரியார், கஸ்தூரிரங்கய்யங்கார் இம் மூவரும் எதிர்த்தனர்.

## கயா காங்கிரஸில் காந்தீயத்தின் வெற்றி

இதையடுத்து 1922-ம் வருஷம் டிசம்பரில் கயாவில் தாஸின் தலைமையில் காங்கிரஸ் கூடியது. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரும், மோதிலால் நேருவும் சட்டசபைப் பிரவேசத் தீர்மானத்தை நிறைவேற்ற பெருமுயற்சி செய்தனர். ஆசாரியார் மாபெருந் தலைவர்களின் பலத்த எதிர்ப்புக் கிடையே, சட்டசபை பகிஷ்காரத்தீர்மானம் காங்கிரஸில் நிறைவேறும்படிச் செய்தார். அதேசமயம் நிறைவேற்றப் பட்ட கடன்மறுப்புத் தீர்மானத்தைப்பற்றி சிலர் கேலி செய்தனர். ஆயினும் அதன் முக்கியத்துவத்தை பிறகு அவர்களே உணர்ந்தனர்.



## ஆசாரியாரின் செல்வாக்கைக்குறைக்க பெருத்த முயற்சி

மகாத்மா சிறையில் இருந்த சமயத்தில் அவரது திட்டங்கள் காற்றில் பறக்காவண்ணம் நிலைநாட்டினார். அதனால் ஆச்சாரியாருக்கிருந்த பேரும், புகழும், செல்வாக்கும் அதிகமாயிற்று. அவர் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் பூரண ஆதிக்கம் பெற்றிருந்தார். அதைக்கண்டு சகியாமல் ஸ்ரீனிவாஸய்யங்காரின் கோஷ்டியினர், ஆசாரியாரின் செல்வாக்கைக் குறைக்க பலவித உபாயங்களைக் கையாண்டனர். அது பலிக்காமற்போகவே சென்னையைத் தனி மாகாணமாக ஆக்கிக்கொண்டால் தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம் என்றமுடிவுக்கு வந்தனர். வசிஷ்டரிடம் பொறாமைகொண்டு விசுவாமித்திரர் புதிய உலகம் சிருஷ்டிக்க முயற்சித்ததுபோலிருந்தது ஸ்ரீனிவாஸய்யங்காரின் இச்செய்கை! இந்தப் புதிய யோசனையும் ஈடேறவில்லை. அதற்கு முக்கியகாரணம் இரண்டே. ஒன்று, ஆசாரியார் பரிபூர்ணமாக காந்தீயத்தை ஆதரித்து வந்தது. இரண்டாவது, அகில இந்தியத் தலைவர்களுக்கும், தமிழ்நாட்டின் முக்கிய காங்கிரஸ் ஊழியர்களுக்கும், ஆசாரியாரின் உண்மையிலும் ஆற்றலிலும் இருந்த திடமான நம்பிக்கை.

## ஆசாரியரை ஊழியர்கள் ஆதரித்ததின் ரகசியம்

ஆசாரியார் எந்த காங்கிரஸ் ஊழியரையும் லேசில் நம்பிவிட மாட்டார். அவர்களுக்கு பொது நிதியிலிருந்து பண உதவி செய்ய மாட்டார். இது காரணமாக சிலருக்கு அவர்மீது வருத்தமிருந்தது உண்மையே. ஆயினும் ஆசாரியார் சுயநல நோக்கு இல்லாதவர்; எப்பேர்ப்பட்ட

காரியத்தையும் செயலில் நடத்திக் காட்டும் திறமையுள்ளவர்; மகாத்மாவின் கொள்கையை நன்கறிந்து, அதைப் பரப்புவதிலும், அதன்படி நடப்பதிலும் இவருக்கு நிகராக வேறெவரும் தென்னாட்டில் இல்லை; என்பதை உணர்ந்தனர் தேச சேவையே முக்கியமெனக் கருதி தியாகம் செய்த ஊழியர்கள். ஆதலால் அவர்கள் ஆசாரியாரை எவ்வித நிலைமையிலும் கைவிடாது பரிபூர்ணமாக ஆதரித்து வந்தனர். தமிழ் நாட்டுத் தலைமைப் பதவியிலிருந்து ஆசாரியாரை விரட்டும் முயற்சியில், சுயநலமிகள் படுதோல்வி யடைந்ததின் இரகசியம் இதுதான்.

## தாஸைக் கட்டித் தழுவுதல்

கயா காங்கிரஸில் தமது கொள்கை வெற்றி பெறுததால் ஸி. ஆர். தாஸ் காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜீநாமா செய்தார். சுயராஜ்யக் கக்ஷியை ஏற்படுத்தி நாடு முழுதும் சுற்றி, சட்டசபைப் பிரவேசத்தை ஆதரித்து பிரசாரம் செய்தார். ஆசாரியாரும் அதை எதிர்த்து தீவிரப் பிரசாரம் செய்யலானார்.

அப்போது ஸி. ஆர். தாஸ் சேலம் வந்து சேர்ந்தார். முனிஸிபாலிடி அவருக்கு வரவேற்புப் பத்திரம் அளிக்கவிருந்தது. ஆசாரியார் தாமே அவ்விடத்திற்குச் சென்று ஸி. ஆர். தாஸைக் கட்டித் தழுவிக் கொண்டார். ஆசாரியாரிடம் உள்ள ஓர் தனிப்பட்ட குணம் இதுதான். ஒருவர் அரசியலில் எவ்வளவுதான் மாறுபட்ட அபிப்பிராயம் உடையவராயிருந்தாலும், அது நட்பை பாதிக்கக் கூடாதென்பது அவரது எண்ணம். ராமசாமி நாயகரிடமே விரோதம் பாராட்டாது, அவரைத் தாமே போய் பார்த்து விட்டு வரும் குணமுடைய ஆசாரியார், ஸி. ஆர். தாஸ் விஷயத்தில் இவ்வாறு நடந்து கொண்டதில் ஆச்சரிய மொன்றுமில்லை.



## நாகபுரி கொடிப்போர்

மகாத்மா சிறை புகுந்த பிறகு அன்னாரது 'யங் இந்தியா' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து ஆசாரியார் அதை நடத்தினார். 1923-ம் வருஷம் மே மாதம் நாகபுரியில் தேசியக்கொடிப் போர் ஆரம்பமாயிற்று. வெள்ளைக்காரர்கள் வசிக்குமிடத்தில் கொடி கொண்டு போகக்கூடாதென நாகபுரி அரசாங்கம் தடைவிதித்தது. அதை எதிர்த்து கொடியின் உரிமையைக் காப்பாற்ற, நாடுபூராவும் அப்போரில் பங்கெடுத்துக் கொண்டது. காங்கிரஸ் காரியக்கமிட்டி அதை அகில இந்திய இயக்கமாக ஒப்புக்கொள்ளச்செய்தது ஆசாரியாரும், அவரது ஆப்த நண்பர்களும் தான். ஜம்னலால் பஜாஜ் இப்போரில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார். இதில் தமிழ் நாட்டுச் சிறந்த தேச பக்தர்களும் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். இப்போரில் காங்கிரஸுக்கே வெற்றி கிடைத்தது.

## காரியக் கமிட்டியிலிருந்து விலகுதல்

இந்த சந்தர்ப்பத்தில் சட்டசபைப் பிரவேசத்தைக் கண்டித்து பிரசாரம் செய்யக் கூடாதென 1923ஆ மேயீ பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தது. இது கயா காங்கிரஸின் தீர்மானத்திற்கு முரண்பட்டதெனக் கருதி வல்லபாய், இராஜேந்திரர், பஜாஜ் முதலியவர்களுடன் ஆசாரியார், காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜீநாமா செய்துவிட்டார்.

## காந்தியடிகள் சுயராஜ்யகக்ஷிக்கு விட்டுக்கொடுத்தல்

அவ்வருஷம் ஸெப்டம்பரில் டில்லியில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தலைமையிலும், டிசம்பரில் காகிநாடா

வில் மௌலானா மகம்மத் அலி தலைமையிலும் கூடிய காங்கிரஸ் மகா சபைகளில், மாறுதல் வேண்டா கக்ஷியினரையும் சுயராஜ்ய கக்ஷியினரையும் சமாதானப்படுத்த பெரு முயற்சி செய்யப்பட்டது. இதற்குள் மகாத்மா காந்தியும் பிப்ரவரி மீ 5உ சிறையிலிருந்து விடுதலையடைந்தார். அவர் சுயராஜ்ய கக்ஷியின் திட்டத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்துவிட்டு, தமது சகாக்களுடன் ராஜீயத்திலிருந்து விலகி, காங்கிரஸின் நிர்மாண திட்டங்களில் கவனம் செலுத்தலானார். அப்போது தான் அகில இந்திய கதர் போர்டு ஸ்தாபிக்கப்பட்டது.

## நிர்மாணதிட்டத்தை நிறைவேற்றுவதில் நிபுணர்

அகிலஇந்திய காந்தி சேவாசங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையொன்று ஜம்னாலால் பஜாஜின் உதவியினால், சேலம் ஜில்லா திருச்செங்கோட்டுக்கருகில் புதுப்பாளையத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. புதுப்பாளையம் மிட்டாதாரரான காலஞ்சென்ற இரத்தினசபாபதி கவுண்டர் பல ஏக்ராநிலத்தை ஆசிரமத்துக்கென கொடுத்துதவினார். அதற்கே 'காந்தி ஆசிரமம்' எனப் பெயர் வழங்கலாயிற்று. ஆசாரியார், ஆசிரமத் தலைவராயிருந்து பலத்த பிரசாரம் செய்தார். அதன் பலனாக பல மதுபானக்கடைகள் மூடப்பட்டன. தமிழில் 'விமோசனம்'; ஆங்கிலத்தில் 'ப்ரொஹிபிஷன்' என்ற மாதாந்திரப் பத்திரிகைகளை நடத்திவந்தார். திருப்பூர் ஓர் முக்கியமான கதர் உற்பத்தி நிலையமாக ஆவதற்கு ஆசாரியார் அல்லும் பகலும் உழைத்தார்; அரும்பாடுபட்டார். அகில பாரத சர்க்கா சங்கம், காந்தி சேவா சங்கம், இவைகளின் பிரதான புருஷராக விளங்கினார். நிர்மாண திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிவைப்பதில் இவருக்



கிருந்த சாமர்த்தியத்தைக்கண்டு மகாத்மாவும் வடநாட்டுத் தலைவர்களும் பெரிதும் மதிக்க ஆரம்பித்தார்கள்.

## ஆசாரியார் தமிழ்நாட்டுச் சர்வாதிகாரியாதல்

சுயராஜ்யகக்ஷியின் வேலைத்திட்டம் பலனளிக்காமற் போகவே, காங்கிரஸ் மகாத்மாவின் உதவியை நாடியது. அவர் தலைமையில் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதென தீர்மானித்தது. ஆசாரியார் மறுபடியும் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கம் வகிக்க இசைந்தார்.

மகாத்மாகாந்தி அகில இந்திய காங்கிரஸ் சர்வாதிகாரியானார். இங்கு தமிழ்நாடு காங்கிரஸ் ஆசாரியாருக்கு சர்வாதிகாரம் கொடுத்தது. அங்கு மகாத்மாகாந்தி தமது ஆசிரம வாசிகளுடன் இருபத்திநான்கு நாட்கள் நடந்து சென்று பம்பாய் மாகாணத்தில் தண்டியில் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். இங்கு நமது ஆசாரியார் 96 தொண்டர்களுடன், 1930௵ எப்ரல்மீ 13உ தமிழ் வருஷப்பிறப்பு தினத்தன்று திருச்சியிலுள்ள டாக்டர் ராஜன் பங்களாவிலிருந்து புறப்பட்டு, 16 நாட்கள் நடந்து சென்று, தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த வேதாரண்யத்தில் 30உ யன்று உப்புச்சட்டத்தை மீறினார். அது சம்பந்தமாக ஆசாரியார் இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டு ஆறுமாத வெறுங்காவல் தண்டனையடைந்தார்.

## ஆசாரியாருக்கு மீண்டும் ஒருவருட தண்டனை

தண்டனை காலம் கழிந்து ஆசாரியார் வெளிவந்த சமயம் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு தமிழ் நாட்டுத் தலைமைப் பதவியை அளித்து, அவர் சிறை புகும்படிச் செய்தார். அச்சமயம் ஜனத்தொகைக் கணக்கு (சென்ஸெஸ்) எடுத்துக்

கொண்டிருந்தது அரசாங்கம். அதைக் கண்டித்து ஆசாரியார் பிரசங்கம் செய்ய, சென்னை அரசாங்கம் நன்னடக்கை ஜாமீன் கேட்டது. ஜாமீன் கொடுக்க ஆசாரியார் மறுக்கவே ஒரு வருட சிறை தண்டனை மூன்றாவது முறையாகக் கிடைத்தது.

## மதுபானக்கடை மறியலை மும்முரமாக்குதல்

அரசாங்கத்தின் சமரச மனோபாவத்தின் காரணமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி 1931 வரு ஜனவரி மீ 25வ விடுவிக்கப்படவே, ஆசாரியாரும் சிறையிலிருந்து வெளிவர சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதன் பலனாக காந்தி—இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. உடன்படிக்கை ஷரத்துகளின்படி மறியல் உரிமைகிடைக்க, அதை ஆசாரியார் நன்கு பயன்படுத்திக்கொண்டார். அவரது பெரு முயற்சியால் பொதுவாக தமிழ்நாடு முழுமையும், முக்கியமாக அரக்கோணத்திலும், மதுரையிலும், கோயம்புத்தூரிலும், மதுபானக்கடை மறியல் மும்முரமாக நடந்து, அரசாங்க வருமானமும் குறைய ஆரம்பித்தது. உப்புரிமையையும் ஏழைமக்கள் பூர்ணமாக அனுபவிக்கும்படிச் செய்தார்.

## பூனா வொப்பந்த கர்த்தாவாக விளங்குதல்

மீண்டும் 1932-ம் வருஷம் சட்டமறுப்பு துவக்கப்பட ஆசாரியார் நான்காம் முறையாக சிறைபுகுந்தார். சிறையிலிருந்து விடுதலையடைந்து சிலமாதங்களான பிறகு, பிரிட்டிஷார் அளித்த வகுப்புத்தீர்ப்பை எதிர்த்து மகாத்மா சிறையிலே சாகும்வரை பட்டினி கிடக்கப்போவதாகத் தெரிவித்தார். உபவாசத்தை நிறுத்தும்படி நேரில் சென்று ஆசாரியார் மகாத்மாவை கேட்டுக்கொண்டும் பிரயோஜன



மில்லாமல் போயிற்று. ஆகையால் ஹிந்துத் தலைவர்களையும், ஹரிஜனத் தலைவர்களையும் ஒன்றுசேர்த்து மகாத்மாவின் மனதுக்கேற்ற ஒரு வொப்பந்தம் செய்துகொள்ளும்படிச் செய்தார். அதை பிரிட்டிஷார் அங்கீகரிக்கவே மகாத்மாவும் உபவாசத்தை நிறுத்தினார். இதுவே பிரசித்தி பெற்ற பூனா வொப்பந்தம். இதில் ஆசாரியாரே பெரும்பங் கெடுத்துக் கொண்டார்.

## காங்கிரஸ் அக்கிராசனர் பதவி

டாக்டர் கிச்லு சிறைபுகவே, அகில இந்திய தேசிய மகாசபையின் அக்கிராசனர் பதவியை ஆசாரியார் சிலகாலம் வகித்து வந்தார். மகாத்மாவின் உபவாசத்தினாலேற்பட்ட நிலைமையில் ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயமாக கவனிக்க வேண்டி யிருந்தமையால் இராஜேந்திரரிடம் அப்பதவியை ஒப்புவித்துவிட்டு ஆசாரியார் விலகிக்கொண்டார்.

ஆசாரியாருக்கு அப்பதவியை வகிக்க சகலவிதத்திலும் தகுதியிருந்தும் அவர் ஒரு சந்தர்ப்பத்திலும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப் படவில்லை. அதற்குக் காரணம் அவரது பேரை அந்த ஸ்தானத்திற்கு பிரேரேபிக்கும்போதே அவர் ஒப்புக்கொள்ளாமல் மறுத்துவந்ததே. ஆனால் 1920-ம் வருடம் முதல் இன்றுவரை, மத்தியில் இரண்டு வருடங்கள் தவிர, தொடர்ச்சியாக காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ஸ்தானம் வகித்து வந்திருக்கிறார்.

## தேவதாஸ் காந்தி—லக்ஷ்மி விவாகம்

ஆசாரியாரின் இளையபுதல்வி லக்ஷ்மிக்கும், மகாத்மாவின் இளைய குமாரரான தேவதாஸ் காந்திக்கும் இடையே அளவுகடந்த அன்பு ஏற்பட்டிருந்தது. அவ்விருவரின் பெற்றோர்களுக்கும் இவ்விஷயம் தெரிந்தது. அவர்களின்

அன்பு உண்மையானதுதானா என்பதைப் பரிசோ[illegible] பெற்றோர்கள் விரும்பினர். உடனே ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. "இரு காதலர்களும் ஐந்து வருஷங்கள்வரை ஒருவரை ஒருவர் பார்க்கவோ, கடிதப்போக்குவரத்து வைத்துக்கொள்ளவோ கூடாது" இக்கடுஞ் சோதனைக்குப் பிறகும் அவர்களிடையே அன்பு நிலைத்திருந்தால் தங்கள் ஆசியும் அனுமதியும் அவர்களுக்குக் கிடைக்குமென மகாத்மாவும் ஆசாரியாரும் அவர்களிடம் தெரிவித்திருந்தனர்.

இந்தப் பரீக்ஷையில் தேறிவிடவே தேவதாஸுக்கும் லக்ஷ்மிக்கும் விவாகம்செய்து வைக்கவேண்டிய தங்களது கடமையென்பதை மகாத்மாவும் ஆசாரியாரும் உணர்ந்தனர். 1933௵ ஜூலை ௴ 16௳ பூனாவில் விவாகம் நடந்தேறியது. மற்ற வைதீகர்களின் எதிர்ப்பையும் லக்ஷியம் செய்யாது, பண்டித லக்ஷ்மண சாஸ்திரி ஜோஷி என்பவர் விவாகச் சடங்குகளை நடத்திவைத்தார். இளம் தம்பதிகளுக்கு பகவத்கீதையும் கதர்மாலையும் மகாத்மா பரிசளித்தார். சரோஜினி, பஜாஜ், பிர்லா, ஸ்ரீனிவாச சாஸ்திரியார், கேல்கார் முதலிய பிரமுகர்கள் திருமணத்திற்கு விஜயம் செய்திருந்தனர். வல்லபாயும், ஜவஹர்லாலும் சிறையிலிருந்தபடியே, வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர்.

## சட்டசபைத் திட்டத்திற்கு ஆசாரியார் ஆதரவு

1934-ம் வருஷம் நாட்டின் நிலைமை மாறிவிட்டது. பிற்போக்காளரை ஒடுக்க சட்டசபைப் பிரவேசத்தை காங்கிரஸ் மகாசபை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கு மகாத்மாவின் ஆசியும், ஆசாரியாரின் ஒத்துழைப்பும் கிடைக்கவே, டில்லிசட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேக்ஷகர்களே வெற்றி பெற்றனர்.



## சிறிதுகாலம் பொது வாழ்விலிருந்து விலகியிருத்தல்

தேக அசௌக்கியம் காரணமாக, பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்வதாகச் சொல்லி, 1935௵ மே ௴ 12௳ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவி, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமைப் பதவி, இவ்விரண்டையுமே ஆசாரியார் ராஜீநாமா செய்துவிட்டார். ஆசாரியாரின் நெருங்கிய சகாக்களான வல்லபாய், இராஜேந்திரர், ஜவஹர்லால் முதலியோரும், மகாத்மாவும் எவ்வளவோ சொல்லியும் ஆசாரியார் அவ்விஷயத்தில் பிடிவாதமாகவே இருந்தார். முக்கியமான சந்தர்ப்பங்களில் தமது ஆலோசனைகளை சொல்வதற்குமட்டும் இசைந்தார்.

## 'அடித்தால் திருடன் ஆக்ஷேபிக்கலாமா?'

அப்போது சென்னையில் நடந்த கடற்கரைக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் ஒருவர் சில கேள்விகளை எழுதி ஆசாரியாரிடம் கொடுத்தார் "நீங்கள்தான் அரசியலிலிருந்து விலகிக் கொண்டதாகச் சொன்னீர்களே? மறுபடியும் ஏன் வந்தீர்கள்?" என்பதே கேள்வி.

"இந்த நண்பர் சொல்வதுபோல் நான் அரசியலுக்குத் திரும்பிவந்து விடவில்லை. அப்படியே நான் திரும்பி வந்தாலும் காங்கிரஸ் வாதிகள் 'ஏன் வந்தாய்?' என்று கேட்கமாட்டார்கள். அவர்கள் எல்லாரும் 'ஏன் போனாய்?' என்றுதான் கேட்கிறார்கள். 'ஏன் வந்தாய்?' என்று கேட்பவர்கள் காங்கிரஸுக்கு எதிரிகள் தான். நான் வந்தால்தான் இவர்களுக்கெல்லாம் ரொம்ப கஷ்டமாயிருப்பதுபோல் காணப்படுகிறது, இதை நினைக்கும்போது எனக்கு முழு

தும் திரும்பிவந்து விடலாமென்றே தோன்றுகிற[illegible] இவர்கள் கேட்பது எப்படி யிருக்கிறது தெரியுமா?

"ஒரு நோயாளி படுத்த படுக்கையாயிருந்தான். அவன் எழுந்திருக்கக்கூடாது, எழுந்திருந்தால் வியாதி குணமாவது தடைப்படும் என்று டாக்டர் சொல்லி யிருந்தார். இதுதெரிந்து ஒரு திருடன் அந்த வீட்டில் புகுந்தான். அவனைப்பார்த்ததும் நோயாளி வியாதியை மறந்து, பக்கத்தி லிருந்த தடியை எடுத்துக்கொண்டு கிளம்பி னான். அதைப் பார்த்த திருடன் 'ஓ! இதென்ன அநியாயம்? படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூடாது என்று டாக்டர் உனக்குச் சொல்லியிருக்கவில்லையா? டாக்டர் கட்டளையை மீறி நீ எப்படி எழுந்திருக்கலாம்? என்று கேட்டான்."

"அந்த நோயாளியைப்போல்தான் நானும். தேக நிலைமை சரியாயில்லையென்று படுத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் வீட்டில் திருடன் புகுந்தால், எவ்வளவு பலவீனமா யிருந்தாலும் நான் எழுந்து தடியை எடுத்து ஓர் அடி போட்டால் அதற்குத் திருடன் ஆக்ஷேபிக்கக் கூடா தல்லவா?" என்றார். இது எதிர் கக்ஷிக்காரர்களுக்குச் சொன்ன பதில்.

காங்கிரஸ்காரர்களுக்கு வேறுவிதமாக எடுத்துரைத்தார். "ஒவ்வொன்றுக்கும் நீங்கள் என்னையே எதிர் பார்க்கக் கூடாது. எதிர் பார்த்தாலும் பிரயோஜனமில்லை. வீட்டில் மாமியாரே சமைத்துக்கொண்டிருந்தால் மாட்டுப்பெண் ணுக்குச் சமையலே வராது!" என்றார்.

இச்சமயம் திருச்சி ஜில்லா போர்டு தேர்தல் சம்[illegible] மாக டாக்டர் ராஜன் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி[illegible]



ராஜன் போன்ற அத்யந்த நண்பரின் இச் செய்கையால் ஆசாரியார் மனம் வருந்தி காங்கிரஸிலிருந்தே விலகிக் கொண்டார்.

## பிரதம மந்திரி யாதல்

ஆனால் பொதுத் தேர்தல் நெருங்கியதும் சர்தார் பட்டேலின் நிர்ப்பந்தத்தின் பேரில் ஆசாரியார் மீண்டும் அரசியல் அரங்கத்தில் தோன்றினார். ஸ்ரீ சத்திய மூர்த்தி பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுக்க, ஆசாரியார் சர்வ கலாசாலைத் தொகுதியில் நிறுத்தப்பட்டுத் தேர்தலில் வெற்றி யடைந்தார். சென்னை மாகாணத்தில் காங்கிரஸுக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் கிடைத்தன. தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடஸ்தர்கள் கொண்ட சென்னை மாகாண காங்கிரஸ் சட்டசபைகக்ஷி ஆசாரியாரையே ஏகமனதாகத் தலைவராய் ஏற்றுக் கொண்டது. ஆசாரியார் முதலில் மறுத்தா ரெனினும், மந்திரிகளின் சுதந்திரத்தில் கவர்னர்கள் தலையிடுவதில்லை யென அரசாங்கம் உறுதிகூறிய பின்னர், காங்கிரஸ் கட்டளைப்படி கவர்னரின் அழைப்பை யேற்று, சென்னையில் மந்திரிசபை அமைத்தார். ஆசாரியாரே பிரதம மந்திரியாயிருந்து திறம்படக் காரியங்களை நடத்தி வந்தார்.

## சட்டசபை மூலம் ஆசாரியார் சாதித்தவை

1935-ம் வருஷத்து அரசியல் சட்டத்தின் போலித் தன்மையை விளக்கி, வரப்போகும் சமஷ்டி அரசியலைக் கண்டித்து, தேசீய கோரிக்கை தீர்மானத்தை சென்னை அரசாங்க சபையிலும், ஜனப் பிரதிநிதி சபையிலும் ஆசாரியார் கொண்டுவந்து நிறைவேற்றினார். மதுவிலக்கு மசோதா, விவசாயிக்கடன் மசோதா இவைகளை நிறைவேற்றி வைத் தார். இதனால் லக்ஷக்கணக்கான ஏழைமக்கள் மிகுந்த

நன்மை யடைந்தனர். கைத்தொழில்களுக்கு மான்[illegible] அளிக்கப்பட்டது. ஹிந்துஸ்தானி பாஷை பள்ளிக்கூ[illegible] மாணவர்களுக்குக் கட்டாயப்பாடமாக வைக்கப்பட்டது. அவர்களின் எதிர்கால நன்மையையும் தேச நலனையும் உத்தேசித்தே இவ்வாறு செய்யப்பட்டது. தொழிலாளர்களுக்கு செய்யப்பட்ட நன்மைகளோ ஏராளம். மிகவும் குறைந்த கட்டணத்தில் காடுகளிலிருந்து விறகுகள் பொறுக்கிக் கொள்ள ஏழைகள் அனுமதிக்கப் பட்டனர். பொது ஜன ஆதரவைக் கொண்டு ஹரிஜனங்கள் தங்குதடையின்றி ஆலயங்களில் பிரவேசிக்க சட்டம் செய்யப்பட்டது.

## நீலாசுரன் இடம்விட்டு மாறுதல்

மகாகொடியவனான கர்னல் நீல் என்ற அசுரனின் உருவச்சிலை சென்னை மவுண்டுரோடிலிருந்து அகற்றப்பட்டு எழும்பூர் பொருட்காக்ஷி சாலையில் பத்திரமாக வைக்கப் பட்டது. இந்த நீலாசுரன் உருவச்சிலையை பொது ஜனப் பார்வையிலிருந்து நீக்கவேண்டுமெனத் தமிழ் நாட்டு இளைஞர்கள் 1927 ௵ சென்னையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். மகாத்மா காந்தியின் ஆசியையும் பெற்றனர். அதன்பயனாக பல ஆண்களும், பெண்களும் சிறைபுக நேரிட்டது. அவர்கள் அன்று செய்த தியாகம் வியர்த்தமாய்ப் போகவில்லை. ஆசாரியார் பழைய சம்பவங்களை மனதிலிருத்துக் கொண்டு சமய சந்தர்ப்பம் பார்த்து இச் சிலையை அகற்றியது பற்றி ஆசாரியாரை வாயாரப் போற்றி புகழாமல் இருக்கமுடியாது. இது விஷயமாக சீமையில் சில ஆங்கிலேயர்கள் இந்தியா மந்திரியிடம் மு[illegible] யிட்டுக் கொண்டும், ஆசாரியாரின் இச் செய்கையில் [illegible] தலையிடுவதிற்கில்லை எனச் சொல்லிவிட்டார்.



## சிறந்த காந்தீயத்தலைவர் மாத்திரமல்ல; நிகரற்ற பிரதம மந்திரிகூட

பிரதம மந்திரி என்ற முறையில் ஆசாரியார், இன்னும் பொதுநன்மைக்கான காரியங்கள் பலவற்றைச் செய்தார். மற்றமாகாண காங்கிரஸ் மந்திரி சபைகளும் ஆசாரியாரின் முறைகளையே பின்பற்ற ஆரம்பித்தன. மகாத்மாவைப் பின்பற்றுவதில் அவருக்கிணை யாருமில்லை. என்ற புகழ் மாத்திரம் ஏற்கனவே ஆசாரியாருக்குண்டு. ஆனால் அவர் பிரதம மந்திரி ஸ்தானம் வகித்த பிறகு, அபாரமான நிர்வாகத்திறமையும் அவருக்குண்டு என்பதை உலகம் அறிந்து கொண்டது. பிரிட்டிஷ் சர்க்காரும், இந்திய சர்க்காரும் கூட ஆசாரியார் இந்திய அரசியலில் ஓர் முக்கியஸ்தர் என்பதை உணர்ந்தனர்.

## பிரமத மந்திரிப்பதவி ராஜீநாமா

ஐரோப்பாவில் யுத்தம் மூண்டது. காங்கிரஸ் மந்திரி சபைகளைக் கலந்து கொள்ளாமலே, ஒவ்வொரு மாகாணத்திலும் யுத்தசம்பந்தமான காரியங்கள் நடக்க ஆரம்பித்தன. இந்த அவமதிப்பை சகிக்கமாட்டாமல் காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜீநாமா செய்யுமாறு தேசிய மகாசபை கட்டளையிட்டது. அதற்கிணங்க நமது ஆசாரியாரும் தமது நண்பர்களுடன் பிரதம மந்திரி பதவியை ராஜீநாமா செய்துவிட்டு வெளியே வந்தார்.

## ஆசாரியாரின் தேசிய சர்க்கார்திட்டத்தை தலைவர்கள் அங்கீகரித்தல்

பின்பு பல அரிய பிரசங்கங்கள்மூலம் இந்தியாவின் கோரிக்கைகளை விளக்கினார். சகல கக்ஷியினரையும் கொண்ட தேசிய சர்க்கார் அமைக்கவேண்டுமென்றார். அவ்வாறு

செய்தால் யுத்தகாரியங்களில் காங்கிரஸ் பூர்ணமாக கெடுத்துக்கொள்ளும் என்று சொன்னார். காங் காரியக்கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பாலோர் இவரது கருத்துக்கு மாறுபட்ட அபிப்பிராயங்கொண்டிருந்தனர். அவர்களை வாதத்தினால் தம் பக்கம் திருப்பி, தமது வேலைத் திட்டத்திற்கு ஆதரவு பெற்றுக்கொண்டார். ஆஸாத், ஜவஹர்லால், வல்லபாய் முதலியோரின் சம்மதியையும் பெற்றார்.

## ஆசாரியார்—காந்தி அபிப்பிராய பேதம்

மகாத்மா காந்தி ஆசாரியாரின் திட்டம் அஹிம்ஸைக்கு முரண்பாடானது என்று கருதலானார், ஆசாரியரோ இந்தியாவின் தற்காப்பு, அயல் நாட்டுப் படையெடுப்பு முதலிய விஷயங்களில் அஹிம்ஸையைக் கடைபிடிக்க முடியாதென்றார். இருவர்களுக்கும் இவ்வாறு அடிப்படையான விஷயத்தில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிட்டது. ஆசாரியாரின் திட்டத்திற்கே மற்றத் தலைவர்களின் ஆதரவு இருப்பது கண்டு, மகாத்மா தமது தலைமைப் பதவியை ராஜீநாமா செய்து, காங்கிரஸை விட்டுவிலகிப் போய் விட்டார்.

## பூனா கோரிக்கையும் அது ஏற்பட்டதின் காரணமும்

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு யுத்தசம்பந்தமாக தமது தார்மீக ஆதரவு பூர்ணமாயிருப்பதாயும், அவர்களது வெற்றியையே தாம் கோருவதாயும், காந்தியடிகள் அடிக்கடி தெளிவாகச் சொல்லி வந்தார். என்றாலும் அத்தகைய ஆதரவினால் மட்டும் தங்களுக்கு உருப்படியான நன்மை ஏற்படாது என்று நினைத்துதான் பிரிட்டிஷ் அரசாங்கம்



இந்திய கோரிக்கைக்கு செவிசாய்க்காமலிருக்கிறதோ என்னமோ என்ற நினைப்பு நாட்டில் ஏற்பட்டது. ஆகவே யுத்தத்தில் நேரடியாகவே காங்கிரஸ் பங்கெடுத்துக்கொள்ளும் என்ற விஷயத்தை வெளியிடுவது அவசியமென ஆசாரியார் நினைத்தார். இதுவே பூனா கோரிக்கை என்பது. இந்தப் பூனா கோரிக்கைக்கும் அரசாங்கம் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

‘எண்ணெய் செலவழிந்ததே ஒழிய பிள்ளை பிழைத்த பாடில்லை’ என்கிறபடி, இந்தப் பூனா கோரிக்கையால் மகாத்மாவும் அவரது அந்தரங்க சகாக்களும் சிறிதுகாலம் அரசியலில் அனாவசியமாகப் பிரிந்திருக்க நேர்ந்ததே ஒழிய, வேறொரு பலனையும் காணவில்லை.

மகாத்மாவை விலகிப்போகும்படிச் செய்த அந்தப் பூனா கோரிக்கையை குழிதோண்டிப் புதைப்பதென முடிவு கட்டனர் இந்தியத் தலைவர்கள். மீண்டும் அவர்கள் மகாத்மாவின் உதவியை நாடினர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மகாத்மா காந்தி நாட்டின் சர்வாதிகாரியானார். அவர் தலைமையின்கீழ் பேச்சுரிமைப்போர் 1940௵ அக்டோபர்௴ 17௳ ஆரம்பமாயிற்று.

## உரிமைப்போரில் ஆசாரியார் சேர்ந்து கைதியாதல்

ஆசாரியார் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து, உண்மையான நிலைமையை மக்களுக்கு எடுத்துக்கூறி உணர்ச்சியை உண்டாக்கிவிட்டு, தாமும் பேச்சுரிமைப் போரில் கலந்துகொண்டார். இது சம்பந்தமாக ஆசாரியார் 1940௵ டிசம்பர்௴ 3௳ சென்னையில் கைதியானார்.

## வழக்கில் மகம்மதிய மாஜிஸ்டிரேட் பகவத்கீதை சுலோகம் சொல்லுதல்

அன்றே சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் வழக்கு சென்னை பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் ஜனாப் அப்பாஸ் அலிகான் முன்னால் விசாரணைக்கு வந்தது. கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் நுழையும்போது எல்லோரும் எழுந்திருப்பதுண்டு. ஆசாரியார் கைதியாயிருந்தபோதிலும், அவர் கோர்ட்டில் பிரவேசிக்கும்போது எல்லோரும் எழுந்து நின்றனர். அதுமட்டுமா? அவர் உட்கார்ந்த பிறகே உட்கார்ந்தார்கள்.

மாஜிஸ்டிரேட் உணர்ச்சி மிகுந்தவராய் என்ன செய்வதெனத் தெரியாமல் தர்மசங்கடமான நிலைமையில் இருப்பதாகத் தோன்றியது.

ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிஶுஷ்யதி /
வேபதுஶ்ச ஶரீரே மே ரோம ஹர்ஷஶ்ச ஜாயதே ||
[பகவத்கீதை 1-வது அத்தியாயம் 29-வது சுலோகம்]

காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே /
ந ச ஶக்நோம்ய வஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன: ||
[பகவத்கீதை 1-வது அத்தியாயம் 30-வது சுலோகம்]

கர்மண்யே வாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன /
மா கர்ம பலஹேதுர்பூர்மா தே ஸங்கோ ஸ்த்வ கர்மணி ||
[பகவத்கீதை 2-வது அத்தியாயம் 47-வது சுலோகம்]

என்ற பகவத்கீதை சுலோகங்களை மாஜிஸ்டிரேட் ஜனாப் அப்பாஸ் அலிகான் சொன்னார்.

"என் அவயவங்கள் விலவிலக்கின்றன. வாய் உலர்கின்றது. உடல் நடுங்குகின்றது; மயிர் சிலிர்க்கின்றது. காண்டீவம் கையிலிருந்து நழுவுகின்றது. உடம்பில் எரிச்சல்



உண்டாகின்றது. மனம் பிரமிக்கின்றது. என்னால் நிற்க முடியவில்லை." என்பதே முதலிரண்டு சுலோகங்களின் தாத்பர்யம். அது பாரத யுத்த சமயத்தில் அர்ச்சுனனுடைய நிலை. அந்நிலைமையிலேயே தாமும் இருப்பதாக மாஜிஸ்டிரேட் தெரிவித்தார். மூன்றாவது சுலோகம், அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ண பகவான் அருளியது. அதன் பிரகாரம் "தொழில் செய்யத்தான் உனக்கு அதிகாரமுண்டு அதன் பலன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரமில்லை. செய்கையின் பலனைக் கருதாதே. தொழில் செய்யாமலும் இராதே" என்பதைக் கடைபிடித்து தமது கடமையைச் செய்யப்போவதாக மாஜிஸ்டிரேட் சொல்லி, ஆசாரியாருக்கு ஒருவருட வெறுங்காவல் தண்டனை யளித்தார். பிறகு ஆசாரியாரைப் பார்த்து, "நீங்கள் விரைவில் விடுதலையடைந்து மீண்டும் பிரதம மந்திரிப் பதவி வகித்தால் என்னைவிட மகிழ்ச்சியடைபவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்" என்று கூறி முடித்தார்.

இராஜகோபாலாச்சாரியாருடைய வழக்கின் வரலாறு, 1922-ம் ஆண்டில் ஆமதாபாத் ஜட்ஜ் ப்ரூம்பீல்டுக்கு முன்னால் நடைபெற்ற மகாத்மா காந்தியின் சரித்திரப் பிரசித்தமான வழக்கை ஒத்திருந்தது.

## ஆசாரியாரின் இலக்கியத் தொண்டு

பாமர மக்களும் புரிந்துகொள்ளும்படி எளிய தமிழிலே ஆசாரியார் பேசுவார். தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். குட்டிக்கதைகள், கண்ணன் காட்டிய வழி, சோக்ரதர், மார்க் அரேலியர் ஆத்மசிந்தனை, உபநிஷத்பலகணி, வேதாந்த விளக்கம், முதலிய நூல்களையும், முதியோர் கல்விக்கான வாசகங்களையும், அழகான எளிய நடையில் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய வேலூர், பெல்லாரி

சிறைச்சாலை அனுபவங்களும் புத்தக ரூபமாய் வெளி திருக்கின்றன. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர் திருக்கிறார்.

## ராஜாஜியின் குடும்பம்

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் தந்தையார் 1920-ம் ஆண்டில் சுவர்க்கவாசியானார். அதற்முன்பே தாயார். அவரது மனைவியார் அலமேலு மங்கம்மாள் 1917-ம் ஆண்டில் காலகதியடைந்தார். அவருக்கு மூன்று குமாரர்கள் உண்டு. மூத்தவரான கிருஷ்ணசாமி 'ஹிந்து' பத்திரிகாலயத்தில் உதவி ஆசிரியர். ராமசாமி சேலத்தில் வைத்தியத்தொழில் செய்து வருகிறார். இளையவரான நரஸிம்மன் தகப்பனாருடன் இருந்து கொண்டிருக்கிறார். இவர் 1932-ம் வருடம் சட்டமறுப்பில் கலந்துகொண்டு ஒன்பது மாதம் சிறையிலிருந்தார்.

மூத்த புதல்வி சிங்காரம் என்கிற 'பாப்பா' ரங்கனில் வக்கீலாயிருந்த ஸ்ரீ வரதாச்சாரியாரை மணந்து சில ஆண்டுகளுக்குள் விதவையாய் விட்டதுடன், தகப்பனாரின் பிதுரார்ஜிதமான காசநோயால் இன்றும் வருந்திக் கொண்டிருக்கிறார். இளைய மகள் லக்ஷ்மி, மகாத்மா காந்தியின் இளைய குமாரரான தேவதாஸுக்கு வாழ்க்கைப்பட்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாராகி விட்டார். பெண் குழந்தையின் பெயர் தாரா; ஆண்குழந்தைகளின் பெயர் ராஜமோஹன், ராமச்சந்திரன் என்பவை. தேவதாஸ் காந்தி டில்லியில் உள்ள 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு ஆசியராக இருந்து வருகிறார்

---

# ராஜாஜியின் உயர்தரமான உவமைகள்

## தொழிலாளிகள்

மெம்பர்களின் குறைகளை சாத்விக சட்டரீதியான வழிகளில் நிவர்த்தி செய்ய தொழிற்சங்க மிருக்கிறது. வேலை நிறுத்தத்தை பிரகடனம் செய்வதற்கு மாத்திரமே சங்க மிருக்கிறது என்று நினைப்பது தவறு. இதனால் வேலை நிறுத்தமே செய்யவேண்டாம் என்பதல்ல. ஒரு மனைவி தனது கணவனுடன் எப்பொழுதாவது சண்டை போட்டுக் கொண்டு, சாப்பிட முடியாதென ஒரு நாளைக்குச் சொல்லலாம். இதிலிருந்து சண்டை போடவே கலியாணம் செய்து கொண்டாள் என்று சொல்வது தவறு. கணவனும் மனைவியும் சேர்ந்து குடும்பத்தை நடத்த வேண்டும்.

* * *

நாம் முதலாளிகளையும் தொழிலாளிகளையும் ஒரு ஆற்றின் இரு கரைகளாய்க் கருதவேண்டும். இதில் ஏதேனும் ஒரு கரை உடைத்துக்கொண்டு போனால், ஆற்றிலிருக்கும் தண்ணீர் வற்றிவிடும். குழாய்கள் இருந்தால் கரைகள் இருக்கவேண்டிய அவசியமில்லை. அதைப் போலவே, சொத்து சகலருக்கும் சொந்தமாயிருந்தால், இரு வகுப்புகள், தொழிலாளிகள்-முதலாளிகள், இருக்காது. அந்தக் குழாயை வைக்கும் காலம் இந்நாட்டுக்கு இன்னம் வரவில்லை.

ஒவ்வொரு தொழிலாளியும் தான் செய்யும் பொ[illegible] தனக்குச் சொந்தமுண்டு என்ற உணர்ச்சியுடன் உழைத்தால் தொழிலும் விருத்தியாகும். தொழிலாளிக்கும் மதிப்பு ஏற்படும். முதலாளிகளின் கஷ்டங்களையும் தொழிலாளிகள் உணரவேண்டும்.

* * *

லாபத்தில் தொழிலாளர்களுக்கும் ஒரு பங்கு கொடுத்தால் நல்லதுதான். தொழிற்சாலையின் முன்னேற்றத்தில் அப்போதுதான் தொழிலாளிகளுக்கு அதிக சிரத்தை ஏற்படும். அப்படி ஏற்படும் நன்மைக்குத் தகுந்தவாறு கூலி குறைந்தால் தொழிலாளிகள் வருந்தக் கூடாது. தொழிலாளிகளும் முதலாளிகள்தான் என்ற நிலைமை ஏற்படுவதற்குச் சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்தால் நல்லது.

* * *

சிவப்புக் கொடி தொழிலாளர்களின் தனிப்பட்ட சின்னம். தேசியக் கொடி தேசிய ஒற்றுமையின் சின்னம். தேசியக் கொடி எப்படி சாத்வீகத்திற்கு அறிகுறியோ அதே மாதிரி சிவப்புக் கொடியும் சாத்வீகத்தின் அறிகுறி தான். அரிவாளும், கத்தியும் பலாத்கார சின்னங்களல்ல. கைத்தொழிலின் மேன்மையைக் காட்டும் அறிகுறிகள். ஆனால் தொழிலாளர்கள் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது தேசியக் கொடியே போதுமான சின்னமாகும். இரண்டு கொடிகளையும் ஏற்றி, பொதுமக்களுக்கு ஏதோ முரண்பாடு இருப்பதாக தப்பபிப்பிராயம் [illegible]க் கூடாது.



கூலி அதிகம் வேண்டுமென்றும், வேலை நேரம் குறைய வேண்டு மென்றும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். வேலை நிறுத்தம் ஒன்று தானா அதற்கு வழி? முதலாளிகளுடன் பேசி, அது முடியாவிட்டால் கவர்ன்மெண்டாரைக் கேட்டு, வற்புறுத்தி வழி தேட வேண்டும். அவசரப்பட்டால் காரியம் கெட்டுப்போகும். முதலாளிகளையும் சமாதானமாய்க் கேட்டால் அவர்களும் இணங்கி வருவார்கள். அப்படி இணங்காமல் பிடிவாதமாயிருந்தால் காங்கிரஸ்காரர்கள் சண்டை போடுவார்கள். இரண்டொருவர் பேச்சைக் கேட்டுக் கொண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. வேலை நிறுத்தத்தால் லாபத்திற்குப் பதில் நஷ்டமே உண்டாகிறது. யார் பேச்சையோ கேட்டு திடீரென்று வேலை நிறுத்தம் செய்தால், குடிகாரன் வீட்டில் குடும்பத்தார் பட்டினி கிடப்பது போலப் பட்டினி கிடக்க நேரிடுகின்றது.

* * *

வேலை நிறுத்தம் சரியான ஆயுதம் என்றாலும், அடிக்கடி அனாவசியமாக அதை உபயோகித்தால் அதன் சக்தி மழுங்கிப் போகும். உண்மையாக வேலை செய்து, முதலாளிக்கும் அதிக லாபம் வந்தால், அதிக கூலி வேண்டுமென்று போராட வேண்டும்.

## கதர்

ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய எல்லா பெரிய தேசங்களிலும் ஒவ்வொருவரும் எந்த வேலையையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். மகாத்மா எல்லோரும் நூல் நூற்க வேண்டு மென்று சொல்கிறார். ஒருவர் செய்வதை எல்லோருமா செய்ய வேண்டு மென்று சிலர் கேட்கிறார்கள். எல்லோருமாகத் தேர்ந்தெடுத்த

தலைவர் சொற்படி நடக்கவேண்டும். நாம் அ[illegible] கதர் உடுத்துக் கொண்டால் அனைவரும் ஒன்று என்ற தைரியம் ஏற்படுகிறது.

*　　　*　　　*

ஜவஹர்லால் நூல்நூற்க ஆரம்பித்துவிட்டாரென்றால் எல்லோருமே அங்ஙனம் செய்ய முடியும். ஜவஹர் ஒரு இரும்புத்துண்டென்று வைத்துக் கொள்ளலாம், காந்தியத் தீஜ்வாலையினால் அவ்விரும்புத்துண்டு உருகிவிட்டது.

*　　　*　　　*

மகாத்மா ஜனங்களின் பொறுமையையும் கட்டுப் பாட்டையும் பரீக்ஷிப்பதற்காகவே கதரையும் நூல் நூற்றலையும் பற்றி அடிக்கடி கூறிவருகிறார். ஒரு வைத்தியர் ஒரு நோயாளியின் வாயில் தர்மா மீட்டரை வைக்கிறார். அந்தக் கருவியை சில விநாடிகள் வரை பொறுமையுடன் வைத்துக் கொள்ள நோயாளி இஷ்டப்படாவிடில், வைத்தியர் தர்மா மீட்டரை எடுத்துக் கொண்டு சென்று விடுவார். அதேமாதிரி மகாத்மா காந்தி ஜனங்களின் சாந்தத்தையும் பொறுமையையும் கதர் மூலமும், நூல் நூற்றல் மூலமும் பரீக்ஷிக்கிறார்.

*　　　*　　　*

கதர் கட்டுவதால் ஏழைகளுக்குக் கஞ்சி கிடைக்கிறது. நூல் நூற்பதால் தன்னடக்கம் ஏற்படுகிறது. ராட்டை சுற்றுவதாலும், கதர் உடுத்துவதாலும் தைரியமேற்படு கிறது. ராமானுஜரை வழிபடுகிறவர்கள் நாமம் போட்டுக் கொள்வது போலவும், சங்கராச்சாரியாரை வழிபடுப[illegible] விபூதி அணிவது போலவும் தான் இதுவும்.



விவசாயிகளுக்கு நூற்பது ஓர் உப வருமானத் தொழில். நாகரீக உடையாகக் கதரை நமக்கு காந்தி யடிகள் சிபார்சு செய்யவில்லை. நாற்பது கோடி ஜனங்களும் கதர் உடுத்தினால் கிராம இந்தியாவில் கொஞ்சம் ஆறுதல் ஏற்படும்.

## தீண்டாமை

ஹரிஜனங்கள் தங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று எண்ணக் கூடாது. 'தாழ்த்தப்பட்ட' என்ற பதத்தையே அவர்கள் மறந்துவிட வேண்டும். ஒரு காலத்தில் அவர்கள் அப்படி அழைக்கப் பட்டதால், அவர்கள் தாழ்த்தப் பட்டவர்களாகவே இருக்க வேண்டிய தில்லை. விதை விதையாகவே இருக்காது. பூக்கள், காய்கள், பழங்கள், இலைகளைத் தரும் பெரிய மரமாகிவிடும்.

*　　　*　　　*

தீண்டாமை நமது சமூகத்தில் மற்றொரு மாசு. அதை எவ்விதத்திலாயினும் போக்கவேண்டும். அது இரண்டாயிரம் வருஷங்களாயிருக்கும் தீமை. மலையைக் கூட அகற்றி வேறிடத்தில் வைத்து விடலாம். ஆனால் வைதீகத்தின் கோட்டையை தகர்ப்பது மிகவும் கஷ்டம். தீண்டாமை ஒரு விஷப்பாம்பு. அதைக் கொல்ல வேண்டும்.

*　　　*　　　*

ஹரிஜன ஆலயப் பிரவேசத்தால் தீட்டுவரும் என்கி றார்கள். அது தப்பு. தீட்டு என்பது பொது அழுக்குதான். அதை நீக்க சுத்தமாக சுகாதார முறையோடு இருக்க வேண்டும். சுத்தமாக இருந்து கோயிலுக்குப் போக வேண்டும்.

ஹரிஜனங்கள் ஆலயத்தில் போவதை நமது முன்னோர்கள் கனவு கண்டிருக்கின்றனர். ஆசைப்பட்டிருக்கின்றனர். இது சிறந்த தர்மம். சுவாமி தரிசனத்தைப் பிச்சை கொடுங்கள். உங்கள் மனதைத் திறந்தால்தான் அது தர்மமாகும்.

* * *

இந் நாட்டில் பல மகாராஜாக்கள் அரசாக்ஷி செய்து வந்திருக்கின்றனர். பல மகாராஜாக்கள் அரசாக்ஷி செய்யப் போகின்றனர். ஆனால் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தால் திருவாங்கூர் மகாராஜா தேடிக் கொண்ட புண்ணியத்திற்கு அவரைக் காட்டிலும் வேறு ஒருவருக்கும் சரித்திரம் முக்கிய பிராதான்யம் அளிக்காது.

* * *

ஆலயப் பிரவேசத்தால் ஹரிஜனங்களுக்குக் கிடைக்கிற அளவு நன்மை மற்றெந்த வகையிலும் கிடைக்காது. உத்தியோகங்கள் கிடைக்கின்றனவே என்று ஹரிஜனங்களே, தங்களைத் தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லிக் கொள்வார்கள். எப்போதாகிலும், பாடசாலையில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொல்லும் போதும், ரயிலில் போகும் போதும் ஆக்ஷேபிக்காத எதிரிகள், ஆலயப் பிரவேசம் என்றதும் ஆக்ஷேபிப்பதில் ரகசிய மிருக்கிறதென்று தெரியவில்லையா? உபயோகமில்லாத சாமான் கொடுக்கப்பட்டதில் ஆக்ஷேபனை யில்லை. விலை யதிகமான சாமானைக் கொடுத்தால் ஆக்ஷேபனை பிறக்கும்.

* * *

கோயிலில் சிறைபட்டிருக்கும் சுவாமியை விடுதலை செய்ய வேண்டும். ரோட்டில் ஜாதி வித்தியாசமின்றி வழி



[illegible]வதைப்போல், கோயிலிலும் வழிவிடுங்கள். காங்கிரஸ் சர்க்கார் இதற்காகச் சட்டம் செய்திருக்கிறது. அதன்படி பெருபான்மையோர் இஷ்டப்பட்டால், கோயில் நிர்வாகப் பொறுப்பாளிகள் இதைச் செய்யலாம் என்பதே சட்டம். நம் மதத்தில் ஒரு பிரிவினரைப் பிரித்து வைப்பது தர்மமாகாது. ஆகையால் இதைப்பற்றி யோசிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* * *

ஹரிஜனங்கள் முன்னேறத் தொண்டு செய்வதானது எவருடைய புகழ்ச்சியையும் பெறுவதற்காக அல்ல. நமது நெஞ்சத்தில் உள்ள வேதனையைப் போக்கவே நாம் பாடுபடுகிறோம். இந்த மகத்தான சேவையில் பலவித கஷ்டங்கள் உண்டு. தப்பு அபிப்பிராயங்களாலும் சந்தேகங்களாலும் இடையூறுகள் விளைகின்றன. யார் நம்மீது எவ்வித தப்பபிப்பிராயம் கொண்டாலும் நாம் நமது வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டே போகவேண்டும். உண்மையின் வியாபகமோ பிரகாசமோ குன்றிவிட மாட்டாது.

* * *

ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரைச் சட்டை முதலியவை அணிந்து கொள்ளக்கூடாதென்று தடுத்து வருவதாகக் கேள்விப்படுகிற எந்த நாடும் அந்த சமூகத்தாரை இகழாமல் இருக்க முடியாது. இத் தகராறு கேவலம் சட்டை யணிதலைப் பொறுத்தது மாத்திரமன்று. [illegible]ழ் ஜாதி மக்களிடம் உயர்ந்த ஜாதி மக்களுக்குள்ள கர்வ [illegible]ப் பான்மையையே இது காட்டுகிறது. இத்தகைய [illegible]ப்பான்மை நீரழிவு வியாதியைப் போன்றது. இவ் வியாதிக்கு உடனே சிகிச்சை செய்ய வேண்டியது அவ

பெயம். இதன் மத்தியில் ஹரிஜனங்களுக்கு ஒரு வார்த்தை. சட்டை போட்டுக் கொள்ள உரிமை கிடைத்து விட்டதென்பதற்காக வெயில் காலங்களில் சதா சட்டையணிந்து தங்கள் சரீரத்தைக் கெடுத்துக் கொள்ளாமலிருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * *

ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்தினால் கோயில்கள் ஒன்றும் கெட்டுப்போய் விடாது. அதைப் பற்றிக் கொஞ்சங் கூட பயப்படவேண்டாம். நம் மெல்லோருக்கும் கோயில்கள் அவசியமே. இதில் யாதொரு பாகுபாடோ, வித்யாசமோ கூடாது. அப்பொழுதுதான் தர்மம் நன்றாய் ஸ்தாபனமாகும். ஆலயப்பிரவேச உரிமை வந்த அடுத்த நிமிஷமே நான் உயிரைவிடத் தயார்.

* * *

ஹரிஜனங்களை பலாத்கார முறையில் ஆலயங்களுக்குள்ளே விடுவது சாத்யமானாலும், சாந்தமாகவும் அமைதியாகவும் நடந்துகொண்டு பொதுஜன ஆதரவைப் பெறுவதே காங்கிரஸின் நோக்கம். ஆலயப்பிரவேச விஷயம் தேசப் பொது நலத்தை உத்தேசித்து செய்யப்படுவதால் சிறுபான்மையோரின் கோபத்திற்குப் பாத்திரமாக வேண்டியிருக்கிறது.

* * *

அழகான கோயிலை ஒரு பிரிவுக்கு மட்டும் 'இல்லை' என்று சொல்லலாமா? அவர்களைக் கோயிலில் 'கும்பிடாதே' என்று சொல்வது பாபமல்லவா? ஒன்றும் தெரியாதவன்தான் கோயிலுக்குப் போகவேண்டும். பிரியத்தினாலும் சம்மதத்தினாலுமே இந்தக் காரியம் ஆக வேண்டும்.



தேவபூஜை பெரிய கௌரவம். எல்லாவற்றிற்கும் அதுதான் அஸ்திவாரம். பெரியவர்கள் கொடுத்த சொத்து இது. இது எல்லோருக்கும் பொதுவானது. இதை மறந்தால் வெறுப்பு அதிகமாய்விடும். முள்ளைச் (வெறுப்பு) சிக்கிரத்தில் எடுக்காவிடில், உடம்பே கெட்டுப் போகும்.

* * *

மேல் ஜாதியினர் கீழே உள்ளவர்களை உயர்வாகக் கருதினால் மேன்மை ஏற்படும். அதற்காக கீழ் ஜாதியினர் எனப்படுவோரை கல்வியாகிய தண்ணீரை விட்டு வேராகிய அறிவை வலுப்படுத்த வேண்டும். மண் இருந்தால்தான் மரம். மண் கீழ் ஜாதியினர், மரம் மேல் ஜாதியினர்.

* * *

மழை பெய்ய மரம் வேண்டும். மரம் இருக்க மண் வேண்டும். மண் இருக்க வேர் அவசியம். ஆகவே வேரைப் பலப்படுத்த வேண்டும். மரத்தை வெட்டினால் வேர் செத்து விடும்.

## மதுவிலக்கு

மாஜி குடிகாரர்கள் விசனத்தில் மூழ்காமலிருக்க பார்த்துக் கொள்வது ஒவ்வொருவருடைய கடமையாகும். துட்டு கொடுத்து புத்தியைக் கெடுத்துக் கொண்டிருப்பது சரியல்ல. திருடுவதுபோல் கள் குடியும். திருட்டு கூடாது என்று சொல்லி திருத்துவதுபோல், திருட்டுத்தனமாய் குடிக்க முயலுபவர்களையும் திருத்த வேண்டும். திருடனை போலீஸார் வசம் ஒப்படைப்பதே போல், குடிகாரர்கள் திருந்தாவிட்டால், அதிகாரிகளுக்குத் தெரிவித்து தண்டனைகள் பெறச்செய்து அவர்களைத் திருந்தச் செய்ய, ஒவ்வொருவரும் உதவ வேண்டும். பெண்களின் துன்பத்தைப் போக்கும்

நோக்கத்துடனேயே மதுவிலக்குச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள்தான் இதில் முதலில் போலீஸ்காரர்களா யிருந்து சட்டம் மீறப்படாமல் காவல் காத்துக் கொள்ள வேண்டும்.

* * *

மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வருவது, ஒரு வீட்டிற்கு மருமகள் வருவதுபோல. அவர்களைக் காப்பாற்றுவது மாப்பிள்ளை மாமியார் இவர்களின் கடமையாகும். புதிதாக வாங்கி வந்த பசுவிற்கு தீனி சவரக்ஷணை எல்லாம் செய்தால்தான் பால் கறக்கும். அதைப் போலவே மதுவிலக்கைக் காப்பாற்றி அதன் பலனை அனுபவிக்க சட்டத்தை சரிவர பாதுகாக்க வேண்டியது கிராமவாசிகளின் கடமையாகும்.

* * *

கள்ளின் வருமானம் ஏழைகளின்மீது மறைமுகமாக போடப்பட்டு வந்த வரிதான். காலணா பெறுமான விஷம் போன்ற கள்ளின்மீது பலவகை மறைமுக வரிகளும் லாபங்களும் சேர்ந்து ஐந்தணாவாக விற்று ஏழைகள் படுகுழியில் தள்ளப் படுவதை காங்கிரஸ் சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

* * *

ஒரு குழந்தையை அதன் தாய் அடித்தாலும் அது அவளையே கட்டிக் கொள்கிறது. அதேபோல், காங்கிரஸ் என்ற தாய் நன்மையைக் கோரி குழந்தைகளாகிய ஜனங்களுக்கு வரி போட்டாலும் ஜனங்கள் பொறுத்துக்கொள்வார்கள். ஆனால் சிலருக்கு அதிருப்தியா யிருக்கிறது.



[illegible]னிலும் ஊருக்கு நல்லது என்று தோன்றினால் அதைச் செய்து முடிப்பது காங்கிரஸின் கடமை.

* * *

மதுவிலக்கு ஒரு பெரிய மாறுதல். அதையே புரட்சி என்றும் சொல்லலாம். இப்போது எங்கும் புரட்சி வேண்டும் என்கிறார்கள். வெளிநாடுகளில் ரத்தப் புரட்சி ஏற்பட்டு சர்க்கார்கள் மாறும். ஆனால் நம் நாட்டிலோ காந்தியடிகளின் புரட்சிகளெல்லாம் (மாறுதல்) அன்பு என்ற அஸ்திவாரத்தின்மீதே ஏற்படுகின்றன.

* * *

குடியைவிட மதுவிலக்கு இன்னம் செலவு மிகுந்ததா யிருக்கிறது. ஒரு டிராம் பட்டைச் சாராயம் ஆறணாப்போ லிருக்கிறது. ஆனால் ஒரு டிராம் மதுவிலக்கு இன்னம் கிராக்கியானதா யிருக்கிறது.

* * *

ஜாதியில் வித்தியாச மிருப்பதாக ஜனங்கள் நினைத்தாலும், கள் வேண்டா மென்பதில் வித்தியாசமே யில்லை.

* * *

வியாதியை சரியாக அறிந்து கொள்ளக்கூடிய டாக்டரைக் கண்டு பிடிப்பதுபோல, மகாத்மாஜியை சரியான டாக்டர் என்று தேர்ந்தெடுத்து விட்டோம். வியாதி சீக்கிரம் குணமாகவில்லையே என்று, வேறு டாக்டரை தேர்ந்தெடுக்கக் கூடாது. வியாதி வந்தால் போவதற்கு நாளாகும். மலைமேல் ஏறினால் வழி முழுதும் இறங்கித்தானே ஆக வேண்டும். வியாதிக்கு பத்தியம் இருப்பதுபோல, கள் குடிப்பதை விட்டு, பொய், மோசம், கலகம் செய்யாமல் இருக்க வேண்டும்.

டேரல் கேட்டு மாதிரி கள்ளுக்கடை இருந்தது. மழை போல சர்க்காருக்குப் பணமும் வந்து கொண்டிருந்தது. ஆனால், கூடவே தரித்திரமும் விருத்தியாகி வந்தது. கள்ளுக் கடைகளை எடுத்தால் தான் தரித்திரம் ஒழியும். சிரங்குள்ள குழந்தைகள் உப்பில்லாப் பத்தியம் இருக்கக் கஷ்டப்படுவது போல, முதலில் கள்ளை விட்டிருப்பது கஷ்டமாய் இருக்கும். ஆனால் பின்னால் வரவர நல்ல சுகமேற்படும்.

*　　　*　　　*

நாம் தபஸ் செய்து மனித ஜென்மமெடுத்தோம். விலை கொடுத்து, மிருகங்களாகலாமா? ஏழைகள் அழிவதைக் கண்ணாரக் கண்டும் காணாததுபோ லிருப்பது தர்மமா? கள்ளை சந்தோஷமாய்க் குடிக்கின்றனர். விஷம் என்று தெரிவதில்லை.

*　　　*　　　*

மதுவிலக்குச் சட்டத்தை நாம் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றினால், தேசத்தையே காப்பாற்றும் சக்தி அதனால் உண்டாகும்.

*　　　*　　　*

கள்ளுக்கு அணைபோட்டால் சமூகத்தில் உறவு பலப்படும்.

*　　　*　　　*

கள் போய்விட்டால் காசு மிஞ்சும். கடன் வாங்க வேண்டாம்.

*　　　*　　　*

எல்லா மதங்களும், கள் குடிப்பதைக் கண்டிக்கின்றன.

*　　　*　　　*

குடிப்பது பாபமென்றும் குற்றமென்றும் இந்தியாவில் கருதப் படுகிறது. காந்தியடிகள் தேசத்திலுள்ள எல்லா



[illegible] கடைகளையும் மூட விரும்புகிறார். ஏனெனில் ஏழைகளை அது அழித்து விடுமென எண்ணுகிறார். ஆனால் துணிக் கடையை மூடுவதுபோல் கள்ளுக்கடையை மூடுவது சுலபமல்ல. கலால் வருமானமாக லாபத்தில் பாதியை சர்க்கார் பெறுகிறது. குடிகாரனுக்கு குடியைவிடுவது கஷ்டம். அதே மாதிரி சர்க்காருக்கு கலால் வருமானத்தை விடுவது கஷ்டமா யிருக்கிறது.

## ஹிந்து முஸ்லீம் பிரச்னை

ஹிந்து முஸ்லீம் பிரச்னை என்பது ஒரு வியாதி. அந் நோய் தீரக் காங்கிரஸிடம் தான் மருந்து இருக்கிறது.

*　　　*　　　*

முஸ்லீம்களுக்கு பொதுத் தொகுதி இருந்தால் அவர்களுக்கு ஜாஸ்தியான செல்வாக்கு ஏற்பட்டிருக்கும். இம் மாதிரியான நிலைமை ஏற்படும்படி செய்ததற்கு அவர்கள் தான் ஜவாப்தாரி. தனித் தொகுதி ஏற்படுத்தி விட்டு எல்லாக் கக்ஷிகளையும் ஒரு பெட்டிக்குள் கரடி, பூனை, சிங்கம் எல்லாவற்றையும் அடைப்பதுபோல் சேர்த்து அரசியல் நடத்துவோம் என்றால் எப்படி முடியும்? அது முடியவே முடியாது. அம்மாதிரி நடத்தினால் ஒழுங்கு முறை என்பது இருக்காது. அரசியல் ஒழுங்காகவும், வெற்றிகரமாகவும் நடக்காது.

*　　　*　　　*

எப்படி ஒரு வர்ணத்திற்கும் மற்றொரு வர்ணத்திற்கும் விரோதம் கிடையாதோ அதேபோல் ஹிந்து நாகரீகத்துக்கும் முஸ்லீம் நாகரீகத்துக்கும் விரோதம் கிடையாது. புஷ்பங்களைப்போல, நாகரீகங்களும் கலைகளும் ஒன்றுக்கொன்று

சேரும் பக்ஷத்தில் உயர்ந்த பலன் அளிக்குமே தவிர விரோதங்களை உண்டாக்காது.

* * *

வயிற்றில் உள்ள கோளாறுகளை எப்படி தலைவலி மருந்து சொஸ்தப் படுத்தாதோ அதேபோல் ஹிந்து-முஸ்லீம் பிரச்னை, காங்கிரஸ்பேரில் அபாண்டமான புகார்களைக் கூறுவதால் நிவர்த்தி யாகாது. அடிப்படையான காரணங் களைக் கண்டு பிடித்து நிவர்த்தி செய்ய வேண்டும்.

* * *

தனித் தொகுதி முஸ்லீம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் அரசியல் விவகாரங்களில் பிரிந்து நிற்கும் சந்தர்ப்பத்தை உண்டாக்கி யிருக்கிறது. காங்கிரஸ் அல்லாத முஸ்லீம்கள் காங்கிரஸ் மாகாணங்களில் அதிகாரத்திற்கு வரமுடியவில்லை. அதனால் சிலர் ஆத்திரப்பட்டு காங்கிரஸ்மீது தவறான புகார் களைக் கூறி வருகிறார்கள்.

* * *

முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதி அவர்கள் எதிர் பார்த்த சலுகைகளை அளிக்கவில்லை. அதனால் அவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர். அவர்கள் பசுவின் ஒரு பாகத்தைக் குறிப்பிட்டு அதுதான் வேண்டுமென்றனர். பசுவின் முன் பக்கம் அவர்களுக்கு கிடைத்தது. ஆயினும் பசுவைப் பால் கறந்து அவர்களுக்கும் ஓர் பங்கு கொடுக்கப் படுகிறது. இதன் காரணம் பால் கறப்பவர்களின் தர்ம புத்தியே ஒழிய ஒப்பந்தப்படி இதுவும் உண்டு என்பதினால் அல்ல. இன்று பசுவைப் பால் கறப்பதிலும் ஓர் பங்கு வேண்டுமெனக் கேட்கிறார்கள். இதில் தவறு எதுவுமில்லை. இதை சுலபமாக ஏற்பாடு செய்து விடலாம். ஆனால் இந்த ஏற்பாடு



இன்னொரு ஏற்பாடுடன் எப்படி பக்கத்தில் இருக்க முடியும்? இதை உணர்ந்தும் 'பசுவையே வெட்டித் தா' என அவர்கள் கேட்கின்றனர். பாலைப் பற்றி கேட்கவேயில்லை. இதனை வெட்டுவதற்குப் பதிலாக பொதுவாக்கி சொந்தமாக்கி பொதுவாக அனுபவிப்பதுதான் நல்ல வழியாகும். இதை அவர்கள் காணத் தவறினர்.

* * *

இந்தியாவை வெட்டுவதானது, வாசலில் பசுவின் பசுவின்மீது பாயத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் புலிகளிடம் அதைத் தூக்கி எறிவது போலத்தானாகும்.

* * *

ஜின்னாவின் கோரிக்கை பசுவை இரண்டாக்க முயற் சிப்பது போலாகும் என்று நான் கூறியது, ஹிந்துக்களின் உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு, ஹிந்துக்களை தனக்கு விரோத மாக்க முயற்சிப்பதாகும் என்று ஜின்னா கருதுகிறார். ஒரு வகுப்பை இன்னொன்றுக்கு விரோதமாகச் செய்ய முடியாது என்று அவர் கூறும் வாதமே, இந்தியா ஒன்றா யிருந்தது, ஒன்றாகத்தா னிருக்க வேண்டும் என்று ருசுப் பிக்கப் போதுமானது. பசுவை உதாரணம் காட்டுவதன் மூலம் உயிருள்ள எதையும் இரண்டு பேருக்கிடையே பிரிக்க முடியாதெனக் காட்டவே விரும்பினேன். இந்தியா செத்துப்போன வஸ்துவல்ல. அது உயிருள்ள பசுவைப் போலவே இன்னமு மிருக்கிறது. உயிருள்ள சாமானை இரண்டாக்கினால் இரண்டு வகுப்புக்கும் தீமை யளிக்கும். விவசாயிகளிடையே பேசியதால் அவர்களுக்குப் புரிவதற் காகப் பழக்கமான பசுவை உதாரணம் கூறினேன்.

இந்தியாவிலுள்ள முஸல்மான்கள் துருக்கிக்கோ அரேபியாவுக்கோ போனால் உடனே அவர்கள் அந்நிய நாட்டிலுள்ள தங்கள் மதத்தினரைவிட இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் அதிகமாகத் தங்களிடம் சகோதரத்துவம் காட்டுவதை உணருவார்கள்.

* * *

முஸ்லீம் லீகின் பாகிஸ்தான் திட்டப்படி ஜனங்களை மாற்றிக் கொள்வது, வளர்த்த மரங்களைப் பிடுங்கி வேறு இடத்தில் நட முயற்சிப்பது போலாகும். இந்த யோசனை தோல்வி யடையு மென்பதில் சந்தேகமே யில்லை. இம் மாதிரியான பகற் கனவு யோசனைகள் தேசத் துரோகமே தவிர, தாய் நாட்டின் விமோசனத்திற்கான முயற்சியல்ல. விமோசன மடைவது ஒற்றுமையினால் தான்; பிளவினால் அல்ல.

* * *

இந்தியாவை ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இன்னம் பலருக்குமாகப் பிரிக்க இதுதான் சரியான சமய மென்று சிலர் நினைக்கின்றனர். மழையும் புயலும் அடிக் கும்போது கூரையையும், ஜன்னலையும் எடுத்து வீட்டைப் பிரிக்கும் புத்திசாலித்தனத்தை இது நிகர்க்கும்!

* * *

ஹிந்து முஸ்லீம் பிரச்னையைத் தீர்க்கத் தனித் தொகுதியை ஒழித்தால்தான் முடியும். ஒரு துணியில் ஓட்டை ஏற்பட்டால் இரண்டாகக் கிழிப்பது தவறு. சேர்த்துத் தையல் போடுவதுதான் சரி. இந்தத் தையல் தான் கூட்டுத் தேர்தல் முறையாகும்.



ஹிந்துவும் முஸ்லீமும் பிளவுபட்டால் கோபுரம் பிளந் தது போல் ஆய்விடும். முஸ்லீம்கள் பயப்படுவது, விடியற் கால இருட்டைக்கண்டு, இருட்டு நீடித்து இருப்பதாக நினைப்பது போன்றதுதான்.

* * *

ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையாகத்தான் முன்னால் இருந்து வந்திருக்கிறோம். இதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஹரிஜனனுக்குக் கிணற்றில் தண்ணீர் எடுக்க மறுத்தாலும் முஸ்லீம்களுக்கு அப்படியில்லை.

* * *

சரியான அளவில் கல், சுண்ணாம்பு, இரும்பு முதலியவை சேர்ந்து, இஞ்சினீயர் சொல்லும் அளவில் எல்லாம் நடைபெற்றதால் இந்த வலுவான "ராஜேந்திர வாராவதி" (வடாற்காட்டில்) கட்டமுடிந்தது. அதேபோல் மகாத்மா காந்தி என்ற இஞ்சினீயர் சொல்கிறபடி ஹிந்து முஸ்லீம் போன்ற வகுப்புகள் சேர்ந்தால், ஒற்றுமை என்கிற வலு வான வாராவதியைக் கட்டிவிடலாம்.

* * *

ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமைக்காகப் பாடு பட வேண்டும். நமது நாட்டில் இவ்விரண்டு சமூகமும், பிரிக்க முடியாதபடி பல நூற்றாண்டுகளாகப் பல துறை களில் இணைக்கப் பட்டிருக்கின்றன. பிரித்துப் பேசுவது தேசத்திற்குப் பெரிய கெடுதியை விளைவிக்கும்.

* * *

ஹிந்து முஸ்லீம் சச்சரவுகளைப் பற்றி பிரமாதமாகக் கருதி நாம் சோககடலில் ஆழ்ந்துவிடக் கூடாது. ஒரு

விதத்தில் அத்தகைய சச்சரவுகள் ஏற்பட்டிருப்பதே நாம் சீக்கிரத்தில் சுயராஜ்யம் அடையப் போகிறோம் என்பதற்கு அறிகுறி.

* * *

பழக் கூடைக்காரி தூரத்தில் வரும்போது, குழந்தைகள் ஒரே முகமாய்த் தாயாரிடம் 'பழம் வாங்கித் தா!' என்று கத்துகின்றன. 'பழக்காரி! பழக்காரி!' என்று ஒரே குரலாய்க் கூப்பிடுகின்றன. ஆனால் அவள் வந்து கூடையைக் கீழே இறக்கியதும், குழந்தைகள் 'எனக்குத் தான் பெரிது' 'எனக்குத் தான் சின்னது' 'எனக்கு இரண்டு வேணும்' 'எனக்கு மூன்று வேணும்' என்று சண்டையிடுகின்றன. இப்போது சுயராஜ்யப் பழக் கூடையைக் கீழே இறக்கியாகி விட்டது. அதனால் தான் சண்டை. காங்கிரஸ் தாயார் எல்லாருக்கும் சரியாய்ப் பிரித்துக் கொடுத்த பின்னர் சண்டையும் தீர்ந்து விடும்.

## ஹிந்துஸ்தானி

ஹிந்துஸ்தானியைப் புகுத்துவதால் தமிழுக்குத் தீங்கு ஏற்பட்டுவிடும் என்று சிலர் மனதில் பீதி ஏற்பட்டிருக்கலாம். நான் ஒரு தமிழன் தான். எனக்குத் தமிழ் பாஷையில் அளவிட முடியாத பிரியமுண்டு. தமிழின் பெருமையை உணராது நான் தவறுகள் செய்வதாகச் சிலர் நினைக்கிறார்கள். நான் அவ்வளவு முட்டாள் அல்ல. திருவள்ளுவர் கூறியபடி ஒருவனுக்கு நாட்டு பாஷை ஞானம் ஏற்படாத வரை அவன் படிப்பு பூர்த்தியாகாது. நாம் இருக்கும் தேசம் ஹிந்துஸ்தானம். இத்தேசத்தில் ஏராளமான மக்களால் பேசப்படும் பாஷை ஹிந்துஸ்தானி. நம் தேசத்துக் குழந்தைகள் பிற்கால இந்தியாவின் நிர்வாகத்தில் பங்



கெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஹிந்துஸ்தானியைக் கட்டாயம் கற்றுக் கொள்ள வற்புறுத்தினோம்.

* * *

தமிழ் என்பது நல்ல கரவைப் பசுவிற்குச் சமானம். பசுவிற்கு சுத்தமான தண்ணீர் மாத்திரம் வைத்து வளர்க்க வேண்டுமென்கிறார்கள். நாங்கள் அப் பசுவிற்குப் புல், வைக்கோல், தவிடு, புண்ணாக்கு முதலியவை போட்டு வளர்த்தால்தான் நன்றாகச் செழிப்பாக வளர்ந்து நிறைய பால் தருமென்று கருதி, தமிழிலேயே எல்லா வகுப்புப் பாடங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

* * *

குழந்தைக்கு அப்பா வேணுமா, அம்மா வேணுமா என்று கேட்டால் என்ன செய்யும்? தாயார் சில விஷயங்களுக்கும், தகப்பனார் சில விஷயங்களுக்கும், ஆக இருவரும் வேணுமென்று குழந்தை சொல்வது இயல்பு. அதுபோல தமிழ் ஹிந்துஸ்தானி இரண்டும் அவஸ்யம். ஹிந்துஸ்தானி தேசம் பூராவுக்கும். தமிழ் நம் தாய் பாஷை. நாம் நம் வீட்டில் வசிக்கிறோம். ஒரு வீட்டிலிருந்து மற்றொருவர் வீட்டுக்குப் போக ராஸ்தா இருக்கிறது. வீடு நமக்கு; ராஸ்தா எல்லோர்க்கும் பொது. வீடு போதும், ராஸ்தா வேண்டாம் என்று சொல்ல முடியாது. ஒரு குழந்தை செல்வமாய் வளர்க்கப்பட்டு வீட்டிலேயே இருந்தால் வெளியே போகத் தெரியாது. என்றைக்காவது போனால் ஒன்றும் தெரியாமல் வண்டியில் அகப்பட்டுக்கொள்ளும்.

ஒரு இலையில் அநேக கறிகாய் பதார்த்தங்களுடன் ஹிந்துஸ்தானி என்ற துவையலையும் பரிமாறியிருக்கிறோம். சாப்பிட்ட சாதம் ஜீரணமடையத் துவையலை உபயோகிப்பது நலமென்று கருதியே அவ்வாறு செய்திருக்கிறோம். துவையல் பிடித்த மில்லாவிட்டால், துவையலைத் தள்ளிவிட்டு மற்றவைகளை உபயோகித்துக் கொள்ளட்டும். பிற்பாடு சாதம் ஜீரணிக்காமல் துவையலின் அவசியத்தை உணர்ந்தால் அப்பொழுது துவையலைச் சேர்த்துச் சாப்பிடட்டும். துவையலின் ருசியும், உபயோகமும் சிலருக்குத் தெரியாத காரணத்தினாலே துவையலை இலையில் பரிமாறக் கூடா தென்பது விதண்டா வாதமாகும்.

* * *

குழந்தை பால் சாப்பிடும் பழக்கத்தை மேற் கொள்ள வேண்டுமென்றால், பால் சாப்பிடும் விஷயத்தை குழந்தையின் இஷ்டத்திற்கு விட்டுவிடுவதா? குழந்தைகள் எவ்வளவு வீறிட்டு அழுதாலும் சரி, தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதை நீங்கள் கவனித்ததில்லையா? அதே போல், பையன்கள் ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்ளும்படிச் செய்ய முதலில் கட்டாயம் வேண்டும். பிறகு அவர்களே அதை விரும்புவார்கள்.

* * *

திருவள்ளுவர் குறளில் நம் நாடு நம் வசப்படவேண்டுமானால் நாட்டின் கல்வி கற்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறார். நம் நாட்டுக்கு பொதுபாஷை ஹிந்துஸ்தானியே. ஆகையால் அதை யாவரும் கற்கவேண்டியது அவசியம்.

## தமிழ்

ககர, சகர வர்க்கங்களின் எல்லாவித சப்தங்களையும் உச்சரிப்பதற்குத் தகுந்த எழுத்துக்கள் தமிழில் இல்லை என்று



குறை கூறுவது சுத்த அபத்தம். இங்கிலீஷில் உள்ள F போன்ற எழுத்துக்குப் பிரதி எழுத்துத் தமிழில் இல்லையே என்று கேட்கலாம். தமிழில் உள்ள 'ழ'வும் மற்ற அநேக பாஷைகளில் இல்லை. ஒரு மொழியின் எழுத்துக்கள் அந்த மொழியின் சொற்களை உச்சரிப்பதற்கே ஏற்பட்டவை. வேறு பாஷைச் சொற்களைச் சரியாக எழுத இந்த பாஷையில் எழுத்து இல்லை யென்பது ஒரு குறை யாகாது. இது எப்படி யென்றால், பழைய சட்டைகள் விற்கும் கடைக்குப் போய் ஒருவன் பழைய சட்டையை விலைக்கு வாங்குகிறான். அதைப் போட்டுக் கொண்டு பார்க்கிறான். கழுத்துப் பிடிக்கிறது; கை நீளமா யிருக்கிறது. அவன் அந்தச் சட்டையைத் தைத்த தையல்காரனைத் திட்டுவது நியாய மாகுமா? அந்தத் தையல்காரன் இவனுக்கு அளவெடுத்தா அந்தச் சட்டையைத் தைத்தான்? யாருக்கோ தைத்த சட்டையை இவன் போட்டுக் கொண்டு தையல்காரன் மேல் புகார் சொல்வது போலத்தான், தமிழில் வேறு பாஷைச் சொற்களை எழுத முடியவில்லையே என்று குறை கூறுவதும்.

## ஸம்ஸ்கிருதம்

இந்த தேசத்தில் பிறந்ததற்கான அடையாளம் ஸம்ஸ்கிருதம் படிப்பதே. உலகில் அதற்குச் சமமானது ஒன்றுமில்லை. இந்த தேசத்துக்கே அது புராதனமானது. நாகரீகத்துக்கும் முன்னே வந்த சின்னம் அதுவே. அந்த பாஷையை நாம் விடக்கூடாது. விட்டுப்போன தெல்லாம் அதிலிருக்கிறது. ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னு[illegible] ஸம்ஸ்கிருதத்தில் சாஸ்திரங்கள் களஞ்சியம் களஞ்[illegible] இருக்கிறன. அவைகள் தெரியா தென்றால் பெரிய அகௌரவ மாகும்.

ஸம்ஸ்கிருத தமிழ் பண்டிதர்கள், தங்களை லெக்சரர்கள் என்று வழங்கவேண்டுமென்று கேட்பது, இந்த நாட்டில் மஹா ராஜாக்கள், தங்களை டியூக்குகள், லெப்டினன்ட்கள், முதலான பெயர்களால் வழங்கவேண்டுமென்று கேட்பது போலாகும். பண்டிதர்கள் பண்டிதர்களாகவே அழைக்கப்பட வேண்டும். அது நமது தேசப் பெயர். அர்த்த புஷ்டியுள்ளது; கௌரவம் வாய்ந்தது. அப்படியிருக்க லெக்சரர் என்ற அன்னிய பெயருக்கு ஆசைப் படுவானேன்?

* * *

ஸம்ஸ்கிருதமே தமிழிலிருந்துதான் வந்ததென்று கூடச் சிலர் சொல்லுகிறார்கள்! இது எப்படியிருக்கிறதென்றால், போளியைப் பிசைந்து உருட்டித்தான் வெல்லம் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது போலிருக்கிறது.

## கல்வி

கல்வி வேறு படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெற சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டில் அதைத் தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகி விடாது. ஆனாலும் தண்ணீரும் அவசியமானது தான். ஆயினும் அதைவிட உணவு முக்கியமானது. அதைப் போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டில் கல்வியைப் பெற்றதாகாது.

* * *

பயப்படுத்தும் பாடங்களைக் கொண்டு கல்வி பயிலுவிப்பது கூடாது. மிரட்டுவதினால் பயன் ஏற்படாது. இதை ஆசிரியர்கள் உணர வேண்டும். 'எழுதப் படிக்கத் தெரியாவிட்டால் ? கெட்டுச் செத்துப்போய் விடுவாய்' என்று மிரட்டி விடுவதில் பிரயோஜனமில்லை.



* * *

பெரியோரை எழுத்து தெரியாத ஒரு குறை காரணமாகக் குழந்தைபோல் பாவிக்கக் கூடாது. சிறிய செடிக்கும் மரத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் போல் குழந்தையும் முதியோருமாவார்கள். குழந்தைகளுடன் பெரியோர்களை வைத்து அவமதிக்கும் விதத்தில் கல்வி சொல்லிக் கொடுக்கக் கூடாது. குழந்தைகள் முன் பெரியோர்களை அவமதிக்காத முறையில் கௌரவமாய் நடத்த வேண்டும்.

* * *

மணலில் எழுதுவது நல்லதுதான்; சுலபங்கூட. சிலேட்டைப்போல் எச்சில் தொட்டுத் துடைக்க வேண்டாம்.

* * *

நம்மிடம் சுய நம்பிக்கையும், தங்களைத் தாங்களே நம்பும் உணர்ச்சியும் கிடையாது. இக்குறை தற்காலக் கல்வியினால் ஏற்பட்டது. மாணவர்களின் ஆக்க அறிவையும் அது அழித்து வருகிறது. பழைய கல்வியின் நோக்கம், கல்வியை அறிவு வளர்ச்சிக்காகவும், பிறருக்கு சேவை செய்யவும் கற்றலே.

* * *

இப்போதைய கல்வி முறையில் கற்றுக் கொடுப்பவரும், கற்றுக் கொள்பவரும் ஒரே நிலையிலிருக்கிறார்கள். இதனால் குழந்தைகள் கெட்டுத்தான் விடுகிறார்கள்.

* * *

சொந்தக் குழந்தை என்று சும்மா விட்டு விட்டால் குழந்தை கடைசியில் கெட்டுத்தான் போய்விடும். கண்டிப்

பாயிருந்து குழந்தைக்குக் கல்வி, தொழில் எல்லாம் கற்றுக் கொடுத்தால் பிறகு குழந்தை பெற்றவரையே காப்பாற்றும்.

## வைத்தியம்

வைத்திய முறைகளை மேல்நாட்டு சிகிச்சை, கீழ்நாட்டு வைத்தியம், ஹிந்து யூனானி என்று பிரித்துக் கொண்டு போவது சரியல்ல. கலையும் மோஸ்தருமே தேசத்திற்குத் தேசம் வித்தியாசப் படலாம். சத்தியத்தில் வித்தியாசம் கிடையாது. சாஸ்திரத்திலும் அப்படித் தான். சாஸ்திரப் பயிற்சியில் தேசீயத்திற்கு இடமில்லை. கலையிலும் மோஸ்தரிலும் தேசீயத்திற்கு இடமுண்டு.

* * *

ஒரு சிலர் விரும்புகிறார்கள் என்பதற்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட தேசம் அந்த முறையை அனுஷ்டிக்கிறது என்பதற்காகவோ யாரும் மருந்து சாப்பிடுவதில்லை. மருந்து சாப்பிடுவது வியாதியைக் குணப்படுத்திக் கொள்ள. அதில் தேசீயம் என்ன வேண்டி யிருக்கிறது?

* * *

ஆஸ்பத்திரிகளில் இங்கிலீஷ் மருந்துகள் வைக்கப்படுகின்றனவே யென்று நினைக்க வேண்டாம். நம் வீட்டிலுள்ள பிள்ளை கல்யாண மாகாமல் சிறு பிராயத்தில் தூரப் பிரதேசத்திற்கு ஓடிப்போய், வெகுகாலம் சென்று கல்யாண மாகி குழந்தை குட்டிகளுடன் நம் வீட்டுக்குத் திரும்பி வருவதுபோல், நம் பண்டைய வைத்திய சாஸ்திரம் நம்மவர்களால் கவனிக்கப் படாமலும் விருத்தி செய்யப் படாமலுமிருந்து, அன்னியர்களால் பராமரிக்கப்பட்டு நூதன முறைகளுடன் நம் நாட்டிற்கு வந்திருக்கின்றது.



ஒருவருடைய அரசியல் அபிப்பிராயம் என்னவாக இருந்தாலும், மருந்து அதன் வேலையை செய்யத்தான் செய்யும். மருந்துகள் இயற்கையின் நியதிப்படியே வேலை செய்கின்றன.

* * *

வைத்தியன் வெறும் தொழிலாளி அல்ல. அவன் தேசத்தின் பிரஜை; ஊழியன்.

* * *

நாம் எல்லோரும் ஆரோக்கிய அறிவு பெற்றுவிட்டால் அப்போது பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் தேவையில்லை. அம்மாதிரி ஸ்திதியை அடைய வெகுகால மாகும்.

## மனிதனின் குரங்கு சுபாவம்

முன்பு ஒருசமயம் லண்டனே தீப்பற்றி எரிந்து போயிற்று. பிறகு கட்டிவிட்டார்கள். இப்போது யுத்தத்தில் பெரிய கப்பல்கள் நல்ல யுத்த அனுபவமும் தேர்ச்சியும் உள்ளவர்களுடன் முழுகிப் போகின்றன. இதனால் தேசமே போய்விடவில்லை. அது போல்தான் காங்கிரசும்.

* * *

சென்னை காங்கிரஸ் மண்டபம் எரிந்து போய் விட்டது. இத்துடன் காங்கிரஸே போய்விட்டது என்று சிலர் சந்தோஷப்படுகிறார்கள். காங்கிரஸ் ஆத்மா போல் இருக்கிறது. அது சாக முடியாது. தேகமாகிற கட்டடம் அழிந்ததே யொழிய ஆத்மா அழிய வில்லை. இப்படி உபதேசம் செய்தாலும் நாம் விசனப்படுவதும் இயற்கைதான்.

* * *

மனிதன் குரங்கிலிருந்து உண்டானதாக நமக்குத் தெரியும். மாலையைக் குரங்கிடம் கொடுத்தால் அது

பிய்த்து விடுகிறது. இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் எல்லா குரங்குகளுக்கும் சந்தோஷம். மனிதனும் அப்படித் தான். ஒரு நல்ல காரியம் கெட்டுப் போனால் சந்தோஷமடைகிறான். நல்ல குணத்தால் அடங்கியிருந்த பழைய மிருக சுபாவம் அப்பொழுது தான் வெளிவருகிறது. இந்தக் குரங்கு புத்தி சந்தோஷம் கொஞ்ச நாள் அனுபவிக்கலாம். பிறகு அது தானாகவே அடங்கிவிடும்.

## சங்கீதம்

நமது தேசத்திலுள்ள சம்பத்துகளில் சங்கீதம் தான் பெரிய சம்பத்து. நம்முடைய மதங்களில் கூட மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆனால் சங்கீதத்தில் அது ஏற்படாது. சித்திரக்கலைகள் கூட வேறு தேசங்களுக்குக் கொண்டு போகப்படலாம். இந்த சங்கீத சம்பத்தை மட்டும் கொண்டுபோக முடியாது. ஆகையால் சங்கீத சம்பத்து தான் சுயராஜ்ய அறிகுறி. வேறு தேச மக்கள் நம்முடைய சங்கீதத்தைக் கற்றாலும் அச் செல்வம் இங்கு குறையவே குறையாது.

* * *

சங்கீதத்தை அனுபவிக்கத் தெரியவேண்டும். எங்கும் பாடசாலைகள் ஏற்பட்டு சங்கீதம் வளரும்படி செய்ய வேண்டும். குழந்தைகளுக்குக் கட்டாயமாக சங்கீதம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

* * *

இந்தியா முழுதும் சங்கீதம் ஒன்றுதான். ஹிந்துக்கள் முஸ்லீம்கள் இவர்களுக்குள் வித்தியாசமிருப்பதாகச் சொன்னாலும், சங்கீதத்தை இருவர்களும் நன்கு அனுபவிப்பார்கள். சங்கீதமே நமது நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடும்.



## அஹிம்சை

கொஞ்ச காலத்திற்கு முன் தேசத்தில் பிரபல்யமாயிருந்த பலாத்காரத்தை அழித்தது மகாத்மா காந்தியின் அஹிம்சைதான். இப்போது அஹிம்சை அழிக்கப்பட்டால், மாண்டுபோன ஒன்றுக்கு (பலாத்காரத்திற்கு) புத்துயிரளிப்பதாகும். இது பெரிய ஆபத்தை விளைக்கக் கூடியது. ஆகையால்தான் மகாத்மா காந்தி அஹிம்சையில் அவ்வளவு தீவிரமாக இருக்கிறார்.

* * *

ஆயுத பலத்திற்கு நிரந்தரமான வெற்றி கிடையாது. ஆயுதங்கள் சில காரியங்களுக்குத் தேவைதான். காய்கறி நறுக்க ஆயுதம் வேண்டும்.

* * *

இந்தியாவின் அஹிம்சை இயக்கத்தைப் பரிகாசம் செய்வது எளிது. ஆனால் பயங்கர இயக்கத்தை வெற்றிகரமாக வென்றது இது தான். ஆயுத பலமில்லாமல் தற்காப்பு செய்துகொள்வது சாத்தியமென்பதை ஒப்புக் கொள்ள நாம் தயாராயில்லாதிருக்கலாம். அதற்காக அஹிம்சையை பரிகாசம் செய்ய வேண்டுமென்பதில்லை. அஹிம்சா இயக்கமும், மகாத்மா காந்தி கூறும் ஆத்மசக்தியும் நல்ல காரியங்களை சாதித்துள்ளன. பொறுப்புள்ளவர்கள் அதைக் கண்டு வியந்திருக்கிறார்கள். ஆகவே பிரிட்டிஷ் இந்தியாவிலும் சமஸ்தானங்களிலும் அதிகாரிகள் அஹிம்சை தத்துவத்தைப் பற்றி இழிவாகப் பேசுவது நன்றி கெட்ட செயலாகும்.

தொந்திரவு செய்யும் பைத்தியக்காரனைத் தனியாக அடைத்து வைப்பது ஹிம்ஸையாகாது. பலாத்கார முறையாகாது.

* * *

மாட்டை வண்டியில் கட்டி ஓட்டுகிறோம். மாட்டுக்கு அதில் ஒரு உரிமையும் இல்லை. அதைப்போல் நம்மை நடத்த நாம் என்ன மாடுகளா? நியாயமான காரணம் இருந்தாலொழிய, மற்றொருவனைக் கொல்லு என்று உத்திரவிட யாருக்கும் உரிமையில்லை.

## அடிமைத்தனம்

பிரிட்டிஷார் இந்தியாவைத் தங்கள் ஆக்ஷியில் அடிமைப்படுத்தி வைத்திருப்பது, இயற்கைக்கும், பூகோள சாஸ்திரத்துக்கும் விரோதமாக இருக்கிறது. ஆதலால் தாமதமன்னியில் இந்தியாவிற்குப் பூர்ண சுதந்தரமளிப்பது நியாயமும் தர்மமுமான காரிய மாகும்.

* * *

சைவனுக்கு மாமிசத்தின் மீது எத்தகைய வெறுப்பு இருக்குமோ, அத்தகைய வெறுப்பு அடிமைத் தனத்தின் மீது ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்.

* * *

அடிமைத் தனத்தின் தாழ்மையை மறந்துவிடும் அளவுக்கு நாம் அதில் மூழ்கிவிட்டோம். மக்கள் எப்போதும் அடிமைத் தனத்துக்கு பணிந்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். அடிமைத் தனத்தைவிட சாவதை விரும்புவார்கள். ஆத்மாவுக்கு சாவு கிடையா தென்றும், சாவுக்கு பயப்படுவது முட்டாள்தன மென்றும் புராதன ரிஷிகள்



கூறியிருக்கிறார்கள். பிச்சைக்காரன் கூட அதைப் பாடுகிறான்.

* * *

எந்த தேசத்திற்கும் மற்றொரு தேசத்தை அரசாள உரிமையில்லை. இந்தியா கீழான தேசமென்று இங்கிலாந்து மனப்பால் குடிப்பது தவறாகும். நமக்குப் பலமில்லை, தற்காப் பில்லை யென்று பிரிட்டிஷார் கூறலாம். ஆனால் நம்மை நிர்ப்பந்தத்தில் ஆளுவதற்கு உரிமை யில்லை; நியாய மில்லை.

* * *

இவ்வளவு பெரிய தேசத்தை அடிமையாக வைத்திருப்பது பெருமையாக நினைத்திருந்த காலம் மறைந்து அவமானமாக நினைக்கும் காலம் வந்து விட்டது. ஆதலால் கூடிய சீக்கிரம் இந்தியா சுதந்திரம் அடைந்தே தீரும்.

* * *

ஒரு நாயைக் கட்டிப் போட்டால் அதற்கு வெறிபிடிக்கத்தான் செய்யும். நாயை இஷ்டம் போல் விட்டு விட்டால் அது குழந்தை மாதிரி இருக்கும். ஆனால் சங்கிலி போட்டுக் கட்டி வைத்தால் அதனுடைய மிருகத் தன்மை திரும்பிவிடும்.

## அரசியல் விஷயம்

வேர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஓர் எரிமலையைப் போன்றது. அதை சர்வதேச சங்கம் என்ற தாழங் கூடையைப் போட்டு மூடினார்கள். எரிமலை வெடித்தது. தாழங்கூடையும் எரிந்து போயிற்று.

நாம் யாருக்கும் அக்கிரமம் செய்யவில்லை. பக்கத்து நாடுகளை விரோதித்துக் கொள்வதற்கு நமக்குக் காரண மில்லை. நாம் தர்மம் தவறாமல் நடந்து கொண்டால் மற்றவர்கள் நம்மிடம் ஏன் சண்டைக்கு வரப்போகிறார்கள்? நாய் கடித்தால் மனிதன் செத்துப்போய் விடுவான். ஆனால் பக்கத்திலிருப்பவர்கள் நல்லவர்களா யிருந்தால் நாய் கடிக்காது.

* * *

இந்தியாவுக்கு ஏதோ அபாயம் வந்திருப்பதாக சொல்லுகிறார்கள். நான் அப்படி நினைக்கவில்லை. நாம் அனுபவித்து வருவதைவிடப் பெரிய அபாயம் என்ன வந்து விட முடியும்? ஏற்கனவே இது இருக்கத்தான் செய்கிறது. நமது ஒற்றுமை சீர்குலைக்கப் பட்டுவிட்டது. புது அபாயம் ஒன்றும் வந்துவிடவில்லை.

* * *

பிறதேசங்களிடம் வெறுப்புக் கொள்ளாமல் நமது தேசத்திடம் அன்பு கொள்ளவும், பிறபாஷைகளிடமும் பிறர் நாகரீகத்திலும் வெறுப்புக் கொள்ளாமல் நமது பாஷையிலும் நமது நாகரீகத்திலும் அன்பு கொள்ளவும், நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அந்த அன்பு தேசத்துக்குப் பயனை அளிக்கும். இல்லாவிடில் கெடுதலையே விளைவிக்கும்.

* * *

இந்த தேசத்தில் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பு, பாலுக்கும் பிராந்திக்கும் உள்ள வித்தியாசம் போன்றது. விஸ்கி ஒரு மனிதனின் அறிவைத் தொலைத்து அவனைக் கொன்று விடுகிறது. பால் ஒரு மனிதனுக்கு ஜீவன் அளிக்கிறது.



இந்தியாவின் தற்காப்பு முறையானது நம்மால் நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாது போயிருக்கிறது என்ற அபிப்பிராயத்தை ஜனங்களுக்கு உண்டாக்கி விட்டது. நூறு வருஷங்களுக்கு மேலாக பிரிட்டிஷார் ஆட்சி செய்தும் பிரயோஜன மில்லாமல் இந்தியர்களைச் செய்துவிட்டார்கள்.

* * *

ஒரு தேசத்தின் தற்காப்பை அதனுடைய தேச பக்திக்கு சமமாகச் சொல்லலாம். ஜனங்கள் தேசபக்தி யுள்ளவர்களா யிருந்தால் அவர்கள் தம் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

* * *

தற்காப்பு இலாகா தேசீய சர்க்காரின் ஆதிக்கத்தில் இருந்தாலொழிய, ராணுவ இயந்திரம் பூராவும் கொஞ்சம் கூட பிரயோஜனமில்லை. மரத்தினுடைய ஜீவனால் தான் அதிலிருந்து புஷ்பங்களும் பழங்களும் கிடைக்கும். வேறொரு மரத்திலிருந்து புஷ்பங்களையும், பழங்களையும் ஒரு மரத்தில் ஒட்டவைத்தால் அது வெறும் சுமையாகத்தான் இருக்கும்.

## அரசியல் விரோதிகள்

எதிர் கக்ஷிக்காரர்கள் வாங்குவதில்லை யென்று, வெறும் பொய்யையே சில பத்திரிகைகள் எழுதி துவேஷத்தையும் வகுப்பு உணர்ச்சிகளையும் மூட்டி வருகின்றன. சுடு தண்ணீரில் பயிர் வளருமா? துவேஷத்தில் நல்லது பிறக்குமா?

* * *

திடீரென்று வீட்டிற்குள் திருடன் வந்து விட்டான். அப்போது எந்த ஆயுதத்தை உபயோகிப்பது என்று யோசிப்பது? தருணத்தில் கையில் கிடைத்த ஆயுதத்தை உபயோகிக்க வேண்டும்.

## காங்கிரஸ் மந்திரி சபை

காங்கிரஸ் மந்திரிசபை ராஜீநாமா செய்ததைப் பற்றி சிலருக்கு விசனம். குதிரைமேல் ஏறிக்கொண்டே நாம் சமையல் செய்ய முடியாது. கீழே இறங்கித்தான் செய்ய வேண்டும். அதைத்தான் இப்போது செய்கிறோம். இப்போது குதிரைக்காரன் மேலே ஏறிக் கொண்டிருக்கிறான். குதிரைக்காரன் என்றால் சொந்தக்கார னல்ல. தேய்த்துக் குளிப்பாட்டிச் சுத்தமாக வைத்திருப்பவன் தான். குதிரை நம்முடையது தான். 'குதிரையைச் சுத்தமாக வைக்க வில்லை' என்ற புகாரை நாம் கவனித்தால் நம்முடைய சமையல் ஆகாது. நம் வேலையைக் கவனித்தால் குதிரைமீது மறுபடியும் எவ்வளவு தரம் வேண்டுமானாலும் ஏறலாம். நாமே முதலில் இறங்கினோம்; நமக்கே ஏறவும் தெரியும். நம் சொந்தக் குதிரையாகையால் என்றும் தைரியமா யிருக்க வேண்டும்.

* * *

தொழிலாளர்கள் ஆலைகளில் தங்கள் சம்பள உயர்வுக்காகவும், குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் எவ்வாறு வேலை நிறுத்தம் செய்கிறார்களோ, அதுமாதிரி நாங்கள் இன்னும் சில வேலைகள் செய்வதற்காகவும், அநேக நன்மைகளை அடைவதற்காகவும் இப்பொழுது வேலை நிறுத்தம் (மந்திரிசபை ராஜீநாமா) செய்திருக்கிறோம்.

## வெஸ்ட் மினிஸ்டர் சட்டம்

வெஸ்ட் மினிஸ்டர் சட்டப்படியுள்ள குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கத் தயாரென இராஜப் பிரதிநிதி கூறியுள்ளார். இந்த மாதிரி ஒரு உறுதியை பிரிட்டிஷாரிடமிருந்து வாங்க, நாம் பலாத்கார வழியில் போராடி யிருந்து



முயன்றிருந்தால், இத்தனை காலத்திற்குள் நூறு கப்பல்கள், யுத்த களத்தில் ஒரு லக்ஷம் பேர் ஆகியவைகளை பலிகொடுக்க வேண்டி யிருந்திருக்கும். ஆனால் நாம் மகாத்மா காந்தியின் அஹிம்ஸா தர்ம நடவடிக்கை மூலம் இவ்வுறுதியைப் பெற்றோம்.

* * *

டொமினியன் அந்தஸ்து என்றால் என்ன? சாம்ராஜ்யத்திலுள்ள இதர நாடுகளைப் போல் இந்தியாவும் உள்நாட்டு விஷயங்களிலோ, வெளிநாட்டு விஷயங்களிலோ, யாருக்கும் உட்பட்டிராமல் சம அந்தஸ்துடன் இருப்பது. இத்தகைய டொமினியன் அந்தஸ்து அளிப்பதாக பிரிட்டன் இந்தியாவுக்கு வாக்களித்ததா? இல்லவே யில்லை.

* * *

பின் இந்தியாவுக்கு அளிப்பதாகச் சொன்ன டொமினியன் அந்தஸ்தின் விசேஷ மென்ன? இந்தியாவின் தற்காப்பு, வெளிநாட்டு உறவுகள், மைனாரிட்டிகள் பாதுகாப்பு, முதலியவைகளெல்லாம் பிரிட்டிஷாரிடம் இருக்குமாம். சமஸ்தானாதிபதிகள் விஷயத்தில் அவர்களுக்குள்ள பொறுப்பை விட்டுக் கொடுக்க முடியாதாம். இவ்வளவு நிர்ப்பந்தங்களுடன் கூடிய டொமினியன் அந்தஸ்தில் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை.

* * *

எந்தவிதமான டொமினியன் அந்தஸ்தாயிருந்தாலும் அது இந்தியாவுக்குப் பொருந்தாது. ஏனெனில், இந்தியர்கள் இதர டொமினியன்களில் உள்ளவர்களைப் போலல்ல. இவர்களுடைய ஜாதி, கலாசாரம் ஆகிய யாவுமே வேறு.

இந்த தேசத்து மக்களால் இந்த தேசத்திற்கு சொந்த முறையில் தயாரிக்கப்படாத எந்த அரசியலையும் பொது மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

## சுயராஜ்யம்

எத்தனையோ அலுவல்களின் மத்தியிலும், எவ்வளவோ கஷ்டங்களுக் கிடையேயும், சுயேச்சை பெற இந்தியாவுக்கு தகுதியுண்டா என்ற தன்னுடைய சந்தேகத்துக் கிடையேயும், யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், பலாத்காரம், ஆதிக்கம், ஏகாதிபத்தியம் இக் கொடுமைகளினின்று உலகை விடுவிப்பதற்காக இங்கிலாந்து இந்தியாவுக்கு விடுதலை அளிக்குமானால் உடனே ஹிட்லர் முறையின் பலன் ஒடுங்கிவிடும். அப்பால் ஹிட்லர் முறை என்னும் புலி, வெறும் பொம்மைப் புலி போல் உயிரற்றதாகிவிடும்.

* * *

இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுத்து விட்டால் பிரிட்டன் இந்தியாவையும் இழந்து விட்டது என்று விரோதிகள் கேலி செய்வார்களே யென்று பிரிட்டன் நினைக்கிறதோ என்னவோ! இந்தப் பொய் கௌரவம் எதற்கு? இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்து விட்டால் பிரிட்டனின் கௌரவம் இன்னும் உயரும்.

* * *

நாங்கள் செத்து மடிந்து போனாலும் இந்த நாடு எங்களுக்குத்தான் சொந்தம். வேறு யாரும் எங்களை ஆள முடியாது. நம் நாட்டில் என்னதான் சண்டைகள் இருந்த போதிலும் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்த நாடு இனி பிரிட்டனுக்கோ வேறு நாட்டுக்கோ சொந்தமா யிருக்க முடியாது.



இந்தியாவை வைத்துக் கொண்டிருப்பது ஒரு பெரிய பாப மூட்டையைச் சுமப்பது போலிருக்கும்.

* * *

இங்கிலீஷ்காரரே இந்தியாவை அனுபவித்துக் கொண்டிருக்க முடியாது. நாம் இதை அடையாமல் இறந்தாலும் நமது பின் சந்ததியார் அடைந்தே தீருவார்கள்.

* * *

ஆயிரம் வருஷங்களுக்கு முன் ரேடியோ, தந்தி, ரயில் இல்லாவிட்டாலும், இந்த நாட்டில் தைரிய மிருந்தது. இப்பொழுது நாம் மாடு மாதிரி, கயிறு பிடிப்பவன் சரியானவனா வென்று மாத்திரம் பார்க்கிறோம். நூறு வருஷமாகத் தகப்பன் பயந்தால் குழந்தைக்கும் பரம்பரையாக பயமேற்படுகிறது. முன்னால் தரித்திரத்துடன் தைரியம் இருந்தது. இப்பொழுது அதுவும் இல்லை.

* * *

பிரிட்டிஷார் இங்கு ஆளவேண்டியது கடவுள் ஆக்ஞை என்று கூறுபவர்களுக்கு, நாம் அதை ஆக்ஷேபிப்பதையும், கடவுள் ஆக்ஞை என்று அவர்கள் கருத வேண்டும்.

* * *

அதிகாரத்திற்கு பயப்படுவதே நமது நாட்டு மக்களின் குணமாக ஏற்பட்டு விட்டது. ஆனால் நியாயமாக இருக்கும் எந்த அரசாங்கத்திற்கும் பயந்து நடக்க வேண்டியது அவசியம்தான். எவ்வளவு நியாயமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இத் தேசத்தை ஆண்டு வந்தாலும் சுயராஜ்யத்திற்கு ஈடாகாது. நம் ராஜ்யத்தை நாமே ஆளுவதுதான் நியாயமென்று தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது.

நமக்குக் கடன் பட்டுள்ள ஒரு நண்பரிடமிருந்து பிராமிசரி நோட்டு ஒன்று கேட்பதற்கும் ரொக்கம் கேட்பதற்கும் வித்தியாசமுண்டு. இந்தியா தற்சமயம் கோருவது ஒரு பிராமிசரி நோட்டே. ரொக்கத்தை நாம் இப்போது கேட்கவில்லை. ஆனால் பணம் நமக்குச் சொந்தமானதென்பதை அறிய விரும்புகிறோம். அதாவது இப்போதே சுயராஜ்யம் கேட்கவில்லை. சுயராஜ்யம் கொடுப்பதாக வாக்களிக்கும்படியே கேட்கிறோம்.

* * *

நம்மை விட்டுவிட பிரிட்டிஷாருக்கு இஷ்டம் இருக்காது. குடியைக் குடிகாரன் கௌரவிப்பது போல்தான் நம்மையும் சில சமயங்களில் அவர்கள் கௌரவிக்கிறார்கள். குடியை நிறுத்த கள்ளுக்கடையையே மூடுவதுபோல் நம்முடைய தேசத்தில் நாம் அடிமைத்தனத்திற்குக் கடையை மூட வேண்டும்.

* * *

இந்தியாவின் சுதந்திரப் பிரச்னையை யோசிக்க இது சமயமல்ல என்று பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லும்பொழுது, தன் வேஷ்டி அழுக்காக இருக்கிறதே என்பதை கவனிக்காமல், பிறர் துணிகளை சுத்தம் செய்யப் புறப்படும் வண்ணானின் செய்கை ஞாபகத்திற்கு வருகிறது.

* * *

பசியையாவது கொஞ்சம் பொறுத்துக் கொள்ளலாம் தாகத்தைப் பொறுக்க முடியாது. அதேபோல் சுதந்திர தாகம் நமக்கு ஏற்பட வேண்டும். நமக்கு இப்போது சுதந்திரப் பசி; சுதந்திர தாகம் இன்னும் ஏற்படவில்லை.



சரித்திரத்தில் 'முடியாது' என்ற பல முறுக்குப் பேச்சுகள் 'முடியும்' என்ற பணிவுப் பேச்சுகளாக மாறியிருக்கின்றன. இப்போது நடக்கும் யுத்தமே அந்த உண்மையைப் பற்றிய கோரமான வியாக்யானமாகும். நாற்பது கோடிபேர் 'முடியும்' என்று கூறினால், ஒருவர் 'முடியாது' என்று கூறுவது க்ஷண மாத்திரத்தில் பறந்து போய்விடும்.

* * *

சுதந்திரம் கொடுக்க முடியாது என வைசிராயோ சர்ச்சிலோ கூறினாலும் சரி, நாம் வாங்கியே தீருவோம். ஒரு நாளில், இல்லாவிடில் ஒரு மாதத்தில் அல்லது ஒரு வருஷம் கழித்துத்தான் கிடைக்கட்டுமே. எங்களுக்கு அவசரமில்லை. ஆனால் சுதந்திரம் நமக்கு நிச்சயமாக உண்டு.

* * *

பிரிட்டிஷார் டொமினியன் அந்தஸ்து கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் காங்கிரஸ் பரிபூர்ண சுதந்திரம் கேட்டதினால்தான் காரியம் கெட்டது என்று சிலர் கூறுகின்றனர். "தண்ணீர் இல்லாமல் பால்கொடு என்கிறாயா? உன்னோடு பேரம் செய்ய முடியாது போ" என்பது போல் இருக்கிறது இவ்வாதம்.

* * *

நாற்பது கோடி மக்கள் சுதந்திரம் கேட்கிறார்கள். "நீங்களே உங்களுக்கு யஜமானர்களாக இருக்கக்கூடாது. பெயரளவிலாவது எங்களுக்கு நீங்கள் பணிந்திருக்க வேண்டும்" என்கின்றனர் பிரிட்டிஷார். இதனை நாம் விரும்பவில்லை. சுதந்திரம் நமது சொத்து; நமது பட்டா; நமது பிறப்புரிமை; அதை அடைந்தே யாக வேண்டும்.

தமது தேசம் மிகப் பெரிய தேசம். நாம் நாகரீகம் வாய்ந்தவர்கள். இந்தியர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்படாமல் ஒடுக்கப்பட்டு வந்தால் அதனால் உலகத்திற்கே ஆபத்து உண்டாகும்.

*　　*　　*

'உங்களுக்கு சுதந்திரம் கிடையா' தென பிரிட்டிஷார் கூறுவது நமக்கே கோபத்தை உண்டாக்கும். இன்னம் இருபது வருஷம் கழித்து இதைக் கேள்விப்படும் நமது சிறுவர்கள் அதிக கோபம் கொள்ளலாம். அதில் பலர் காடு முரடு ஆசாமிகளாக இருக்கலாம். பிறகு ஒரு எரிமலை போல இக் கோபம் வெடிக்கலாம்.

*　　*　　*

ஒரு சிறுவன் அன்று பிறந்த கன்றுக் குட்டியை தூக்கக்கூடும். அதனுடன் சிறிது காலம் விளையாடக்கூடும். ஆனால் அக் கன்று பசுவானால் சிறுவனையே தூக்கிவிடுகிறது. இந்தியா இப்போது ஒரு பசு என்பதை பிரிட்டன் உணர வேண்டும்.

*　　*　　*

ஒருவன் ஒரு பெண்ணை மணந்து கொள்ள விரும்பினால், ஜோசியரிடம் இருபது தடவை செல்வதால் அவளைப் பெற முடியாது. உறுதி கொண்டால் தான் அப்பெண்ணைப் பெறலாம். பூர்ணசுதந்திரம் நம்மை நேசிக்கிறது. நாம் அதனை நேசிக்கிறோம். விவாகம் நிச்சயம் நடந்தே தீரும்.

*　　*　　*

நாம் சுதந்திரத்துக்கு தகுதியில்லை யென்று நம்மை ஆளுபவர்கள் சொல்லுகிறார்கள். தகுதியைப் பற்றி யாரும் கேட்கவில்லை. அவர்களின் நோக்கத்தையே நாம் கேட்டோம்.



நம்முடைய திறமையையோ சக்தியையோ பற்றி அவர்களிடம் தீர்ப்பு கேட்கவில்லை. அதெல்லாம் நமக்கு ஆண்டவன் கொடுப்பார்.

*　　*　　*

முன்னோர்கள் நம் இந்தியா சுதந்திரமாயிருக்குமென்று நம்பி இருந்தார்கள். நம் பின்னோர்களுக்கு நாம் வைக்க வேண்டியது கோவில், தோப்பு அல்ல. அவர்கள் கவலைப்படாமல் இருக்கச் செய்ய வேண்டியதுதான். அதற்கு நாம் தேடிவைப்பது சுதந்திரம் தான்.

## தேசபக்தியும் சுதந்திரமும்

உண்மையானதும், நிரந்தரமானதுமான தேசபக்தியை விருத்தி செய்ய வேண்டும். அத்தகைய ஒரு தேசபக்தி வெறும் தொடர்ச்சிப் பிரசங்கங்களின் வாயிலாகவாவது, அல்லது எப்பொழுதாவது ஒரு முறை புலம்புதலினாலாவது பெறக்கூடியதல்ல. ஆனால் அமைதியாயிருந்து சிந்திப்பதின் விளைவாலும், கிரியாம்சையின் அடிப்படையான பிரதிக்ஞையாலுமே அது பெறக்கூடியது.

*　　*　　*

தேசபக்தியை அவலம்பிப்பது லேசானதல்ல. ஆரம்பத்தில் அது மிகவும் தொந்திரவாகத் தென்படும். ஆனால் அதில் தியாகம் செய்தபின் மகிழ்ச்சி ஏற்படும். வேடிக்கைக்கல்லாமல் முழுமனதோடு காரியம் செய்தாலல்லாது எந்த ஒரு தேசப் பற்றும் கஷ்டமாகத்தான் தோன்றும். தக்ளியில் நூற்பதும், சிறை செல்வதும் மேற்கண்ட வகைதான்.

*　　*　　*

உடலும் உயிரும் வெவ்வேறாக இருக்க முடியாது. அது போலவே தேசபக்தியும் தலைவர்களைப் பூஜித்தலும்

ஒன்றேயன்றி வேறில்லை. தேசத்தலைவர்களிடம் பக்தி பரவசம் கொள்ளாத தேசபக்தி வெறும் உயிரற்ற பிரதேசமேயாகும்.

* * *

இன்று பிறக்கும் ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் அடிமையாகப் பிறக்கிறது என்பது பரிதாபகரமான உண்மையாகும். பிறந்த நிமிஷத்திலிருந்து அரசியல் அடிமைகளாயிருந்தால் ஜாதிக்கட்டுப் பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டால்கூட என்ன பிரயோஜனம்? இதனால் தான் அரசியல் அடிமைத் தனத்தினின்றும் நம்மை விடுவிக்க சரியான மருந்து கண்டுபிடிக்க காந்தியடிகள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

* * *

கஷ்டமோ துன்பமோ அடையாமல் எதையும் பெற முடியாது. பெரிய தியாகங்களும் கஷ்டங்களும் மேற்கொண்ட பிறகும், முயற்சியில் வெற்றி கிட்டும் என்பது நிச்சயமில்லை. கிட்டா விட்டாலும், தேசபக்திக் கனலை அவிய விடாமல் காப்பாற்றி, வருகிற சந்ததியிடம் ஒப்புவித்த பெருமை நமக்கு உண்டு.

* * *

ஒற்றை நெருப்புக்குச்சியை நாம் எவ்வளது ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிறோமோ அப்படியே சுதந்திர வேட்கையை காப்பாற்றவேண்டும். முயற்சியில் நமக்கே வெற்றிகிட்டுமானால் நல்லதுதான். ஆனால் ஏதாவது ஒரு காரணத்தின் விளைவால் ஏமாற்றம் நம்மை எதிர் நோக்குமானால், நாம் விட்ட இடத்தில் வாலிப வாரிசுகள் வந்து நின்று பரிபூர்ண சுதந்திரத்தைப் பெறும்.



சுதந்திர தாகத்தை அடக்கும் முயற்சி வெற்றி பெறாது. உணர்ச்சிகளை உண்டாக்கும் அரசியல் வியாதிக்கு அது மருந்தாகாது. அமுக்குதல் அதிகமானால், வெடிப்பது அதேபோல் இன்னும் கடுமையாகும்.

* * *

இந்தியர்கள் காட்டு மிராண்டிகளல்ல. புத்திக் கூர்மையிலோ உடல்வலியிலோ நாம் யாருக்கும் இளைத்தவர்களல்ல. நாம் அதைரியப்படவேண்டிய அவசியமேயில்லை.

* * *

இந்தியா இந்தியர்களுக்கே சொந்தம் என்ற உணர்ச்சியும், எவ்விதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் உறுதியும் நம்மிடையே இருக்குமானால், நமதுநாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு விடுமென்பதில் சந்தேகமே கிடையாது.

* * *

எப்படியும் சில வருஷங்களுக்கு மேல் இந்தியா இப்போதுள்ள அடிமைவாழ்வில் இருக்கப்போவதில்லை. இந்த சந்தர்ப்பத்தில் சுதந்திரம் அளிக்க பிரிட்டன் மறுத்தால் எவ்வித சௌகரியமு மின்றி வீணான மனஸ்தாபத்தைத் தேடிக் கொள்ளுவது தான் லாபமாகும்.

* * *

நம் நாட்டில் மக்கள் போடும் 'ஜே' கோஷ சக்தியை ஒரு யந்திரத்தில் மாட்டினால் மிக்க உபயோகமான காரியங்களைச் சாதிக்கலாம்.

* * *

கிராமத்தினர்கள் மின்சார சக்தி போன்றவர்கள். அதை ஆங்கிலேயர்கள் அறிந்தால் சுதந்திரத்தைத் தானாகவே கொடுத்து விடுவார்கள்.

மாட்டுக்குப்பின் கன்று காட்டுக்குப் போனால்தான் நல்லது. தனியாகப் போனால், புலி கன்றைக் கொன்று விடும். அதே போல் தேசத்தலைவர்கள் சொல்வது போல் கட்டுப்பாடுடன் மக்கள் நடக்கவேண்டும்.

## ரத்ன கம்பளத்தில் பொத்தல்

வீட்டில் விரித்திருக்கும் ரத்ன கம்பளத்தில் ஒரு பொத்தல் இருந்தால், நல்ல சேவகன் அதன் மேல் தன் மேல் வஸ்திரத்தைப் போட்டு, விருந்தாளியாக வந்தவர்கள் கண்ணுக்கு அப்பொத்தல் படாதவாறு மூடிவிடுகிறான். மூடச் சேவகனோ நாலு பேர் முன்னால் அந்தப் பொத்தலைப் பற்றிக் கூப்பாடு போட்டு அதைப் பார்க்காதவர்களும் பார்க்கும்படி பண்ணுகிறான். இது ஓர் பாரஸீக பழமொழியின் கருத்து. மனுஷ்யர்கள் குறை உள்ளவர்கள். காங்கிரஸிலும் மனுஷ்யர்கள் தான் இருப்பதால் சில சமயம் தவறு நேர்தல் சகஜமே. காங்கிரஸ் அபிமானிகளில் சிலர் அந்தத் தவறுகளைப் பெரிது பண்ணாமல் சீர்திருத்த முயல்வார்கள். வேறு சிலரோ அவைகளைப் பெரிது பண்ணி அந்த சந்தர்ப்பத்தில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளைக் காட்டுவார்கள்.

## சமூக சீர்திருத்தம்

நமது சமூக ஆசாரங்களிலும், பழக்க வழக்கங்களிலும் எவ்வளவோ தீமையான அம்சங்கள் இப்போது இருக்கின்றன. அவைகளை மாற்ற வேண்டியதுதான். ஆனால் அதற்காக அந்த ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திய நமது முன்னோர்களை நாம் திட்ட வேண்டியதில்லை. அந்தக் காலத்தில் அவைகளுக்கு ஏதோ உபயோகமிருந்திருக்கலாம். நமக்குத் தெரியாதபடியால் அவர்களை மூடர்கள் என்று சொல்லக் கூடாது. உதாரணமாக;—



மரங்களுக்கு மேலே பட்டை இருக்கிறது. மரங்கள் ஜீவித்திருப்பதற்கும் வளர்வதற்கும் அந்தப் பட்டை மிகவும் அவசியம். ஆனால் மரம் முதிர்ச்சி யடைந்து வெட்டிய பிறகு, கட்டட வேலைகளுக்கு உபயோகப் படுத்தும்போது, தச்சன் முதலில் பட்டையைத் தான் செதுக்கி யெறிகிறான். அப்போது அப்பட்டைக்கு எவ்வித உபயோகமுமில்லை. அதனால் மரத்துக்குப் பட்டையே வேண்டியதில்லை யென்று சொல்லி விடலாமா? பட்டை யில்லாமலே மரத்தை வளர்த்திருக்க வேண்டும் என்று அந்தத் தச்சன் மரம் வளர்த்தவனைத் திட்டினால், அவனை மூடன் என்று சொல்ல மாட்டோமா?

* * *

சமூக சீர்திருத்தத்துக்கு அன்புவழிதான் சிறந்தது. துவேஷப் பிரசாரத்தினால்தான் விரைவில் பலன் ஏற்படுவது போலவும், அன்பு வழியினால் பலன் அதிகமில்லை போலவும், காலதாமதம் போலவும் காணப்படலாம். அது பொய்த் தோற்றம்.

கட்டை வண்டியில் போகும்போது ஆட்டமும் அசைவும் அசாத்தியமா யிருக்கிறது. தலையிலும் முதுகிலும் அடி கூடப் படுகிறது. எலும்புகள் நொறுங்குகின்றன. ஆனால் உயர்தர மோட்டார் வண்டியில் போகையில் உடம்பே அசங்குவதில்லை. இதிலிருந்து கட்டை வண்டிதான் வேகம், மோட்டார் மெது என்று யாராவது சொல்வார்களா? எவ்வளவு ஆட்டம் ஆடினாலும் கட்டை வண்டி மணிக்கு மூன்று மைல்தான்; மோட்டார் அசங்காமல் போனாலும் மணிக்கு நாற்பது மைல் போகிறது. இதுபோல் துவேஷப் பிரசாரத்தில் ஆர்ப்பாட்டமும் தடபுடலும் அதிகமா யிருக்கலாம். ஆனால் அன்பு வழிதான் உண்மையில் சுருக்கு வழியாகும்.

## தேசீயக்கொடி

தேசிய வர்ணக் கொடியை சுமார் இருபது வருஷங் களுக்கு முன்பு மௌலானா முகமத்அலியும், ஷவுக்கத் அலியும், மகாத்மா காந்தியும் கூடி தொழில்களைக் காரண மாகக் கொண்டு ஏற்படுத்தினார்கள். இதில் மத சம்பந்தமே கிடையாது. யாராவது அதை வேண்டா மென்றால் அடித்து வற்புறுத்தக் கூடாது. வற்புறுத்தினால் வெறுப்பு ஏற்பட்டு துவேஷம் அதிகமாகும். ஒரு குழந்தையிடம் தினந்தோறும் ஒரு அடி அடித்து ஒரு பிடி சர்க்கரை கொடுத்து வந்தால், நாளடைவில் குழந்தை, அடியும் வேண்டாம் சர்க்கரையும் வேண்டாம் என்று சொல்லிவிடும். அடி பட்டு இனிப்பு பெற்றுக் கொள்ள குழந்தை விரும்பாது. ஆகையால் வேண்டாம் என்பவர்களிடம் அதைக் காட்டவும் வேண் டாம் என்று காந்தியடிகள் சொல்லுகிறார்.

* * *

ஹிந்து மத சம்பந்தமான விஷயங்களுக்கு, எல்லா மதத்தினருக்கும் பொதுவான தேசீயக் கொடியை உபயோ கப்படுத்தக் கூடாது. அவ்வாறு உபயோகப் படுத்துவதால் அக் கொடி தேசீயக்கொடி யல்லாமல் ஹிந்துக்கொடி என்றாகி விடும்.

## மகா கவி பாரதியார்

பாரதியாரின் பாட்டைப் பாடினால் மனச் சோர்வு, அதைரியம், சந்தேகம் எல்லாம் ஓடிவிடும். அர்த்தத்தை சரி யாகத் தெரிந்து கொண்டு பாடினால் நல்லது. பாரதியார் பொருளை நாடிக் காவியங்கள் இயற்ற வில்லை. அது தானாகவே நாவிலிருந்து வெளிவந்த ஸ்வரம். தேசபக்திக்கும், உற்சாகத்திற்கும், பெரிய நோக்கத்திற்கும் அவர் ஒரு விதை



யாக இருந்தார். அவர் பாடல்கள் எல்லாரும் பங்கிட்டுக் கொள்ள கூடிய விதைகள். அவர் பாடியது, தெய்வ க்ஞையால் நமக்கு அளிக்கப்பட்ட தாகும். அவரது டல்களைப் படித்தால் நல்ல நடத்தை, கௌரவம், கடவுள் பக்தி உண்டாகும். நல்ல தமிழ் கற்றுக் கொள்ளலாம்.

* * *

பாரதியார் பாடல்களைப் பள்ளிக் கூடங்களில் எதற் காகக் கட்டாயப் பாடமாய் வைக்க வேண்டும்? அதற்கு அவசியமே யில்லை. தாய்ப் பாலை யாராவது பாலோடை யால் ஊட்டுகிறார்களா? குழந்தை தானாக அந்தப் பாலைச் சாப்பிடுமே!

## அழகு என்பது என்ன?

அழகு என்றால் என்ன? மனதில் உள்ளதை உள்ள படியே கூறுவதுதான் அழகு. அதற்கு மேலும் அழகு செய்வது முடியாது. புஷ்பச் செடிகள் தாமாகவே பூத்து புஷ்பிக்கின்றன. பலவிதமான புஷ்பங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு வர்ணம் தீட்டி, திட்டம் போட்டெல்லாம் யாரும் புஷ்பிக்க வைக்கவில்லை. இது பூஞ்செடியின் தர்மம். அதேபோல் மனுஷ்யர்களும் சுபாவிகமாக, கோர்வையாக சிந்தனை செய்து, மனதில் உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவதுதான் அழகு, தர்மம்.

## குடிகளும் ஜமீன்தாரும்

குடிகளுக்கு ஜமீன்தாரிடம், புலி சிறுத்தைகளிடம் இருப்பதைப் போல, பயம் கூடாது. ஊரைப்பாதுகாக்கும் தலைவரே ஜமீன்தார். புலிக்குத்தான் ஆளைக்கண்டால் பயம். மாடுகள் ஆளைக் கண்டு பயப்படுவதில்லை. அது போல் மீன்தார்கள், குடிகளைக் கண்டு பயப்பட மாட்

டார்கள். அதைப்போலவே எல்லா ஜமீன்தார்களும் இருக்க வேண்டும்.

## கிராம ஜனங்கள்

கிராமாந்திரங்களில் ஜனங்கள் நல்ல ஜலம் எது? குடிக்க எது நல்லது? குளிக்க எது நல்லது? என்றுகூட, பிராம்மணர் வீட்டுக் கன்றுக்குட்டிக்கு பாஸின் ருசி தெரியாதது போல், தெரியாமலிருக்கிறார்கள்.

## தோட்டி வேலையைப் பழகு

தோட்டிகள் செய்யும் காரியங்களை நாமே செய்து பழகிக் கொள்ள வேண்டும். அவர்களது வேலையை சுலபமாக்க முயற்சிக்க வேண்டும். குழந்தைகளைப் பொது ரஸ்தாக்களிலும், அண்டை வீட்டுக்காரர் வாசல் முன்னும், மலஜலங் கழிக்கும்படி பெற்றோர்கள் விடக்கூடாது.

## வேரூன்றிய மரம்

ஆண்கள் பறக்கும் பக்ஷிகளைப் போல. அவர்கள் என்ன வேணுமானாலும் லகுவில் செய்து விடலாம். ஆனால் பெண்கள் அப்படியல்ல. நன்றாய் வேரூன்றிய மரத்துக்குச் சமமானவர்கள். மரத்தை வேரோடு பிடுங்குவது கஷ்டமல்லவா? அதுபோல் எல்லா பந்தங்களையும் அறுத்துக் கொண்டு பெண்கள் வெளிக் கிளம்புவது சற்று கடினமே.

## மகாத்மா காந்தி

கெடியாரம் ஓடுவதற்காக நாம் அவ்வப்போது சாவி கொடுக்கிறோமல்லவா? அதைப்போலவே உலகம் நன்றாக நடைபெறுவதற்காக பகவான் உலகில் அவ்வப்போது அவதார மெடுக்கிறார். மகாத்மா காந்தி அத்தகைய அவதார மூர்த்தியே.



சப்த சமுத்திரங்களுக்கும் அப்பால் வசிக்கும் மக்கள் தாஜ்மஹாலைப் பற்றிக் கேள்விப்படாமல் இருக்கலாம். இந்தியாவின் மகத்துவத்திற்குக் காரணமான ஸம்ஸ்கிருத பாஷையைப்பற்றியும் கேள்விப்படாமல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு மகாத்மா காந்தி என்றால் தெரியும்.

* * *

மகாத்மா காந்தியைப் போல் ஹிட்லரையும் உலக முழுவதற்கும் தெரியத்தான் செய்யும். ஆனால் அவரைப் பற்றி அபிப்பிராய மாறுபாடுகள் உண்டு. மகாத்மாவை உலகம் முழுவதுமே விரும்பி அவரிடம் அன்பு செலுத்துகிறது. ஹிட்லரையோ ஜெர்மனி தவிர, உலகம் பூராவும் வெறுக்கிறது.

* * *

மனத்தைக் கவரும் வித்தையில் இன்று கைதேர்ந்தவர் மகாத்மா காந்தி என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

* * *

மகாத்மாவுக்கோ வயது எழுபதுக்குமேல் ஆகிறது அவர் நூறு வயது வரையில் இருக்கப் போவதாக வைத்துக் கொண்டாலும் அவருக்கு தள்ளாமையும் பலஹீனமும் மேலிட்டு வருகிறது. அவருடைய ஜீவியகாலத்தில் சுயராஜ்யம் கிடைத்தால் இந்தியாவில் சச்சரவும் தகராறும் இருக்காது. மகாத்மாவுக்குப் பிறகு இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும் அந்த சுயராஜ்யம் வந்த பிறகு இந்தியாவில் குழப்பமும் பலத்த கலவரமும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இதை உத்தேசித்து தான் இப்பெரியாரின் வாழ்நாளிலேயே இந்தியாவின் சுயராஜ்யத்திற்கு முயலுங்கள் என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

காந்தியடிகளின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டு மென்முல், மற்ற தலைவர்களை மட்டப்படுத்தி விட்ட தாகாது. ஹிமயமலைதான் பெரியமலை என்முல், இதனுல் நீலகிரி அல்லது திருச்செங்கோடுமலை ஆகியவை அவமானப் படுத்தப் பட்டதாகக் கருதக் கூடாது.

## ராஜாஜியின் பெருமை

ராஜாஜி இந்தியாவில் பிறக்காமல் மேல் நாட்டில் பிறந் திருந்தால் அவர் நிலைமை வேறு விதமா யிருந்திருக்கும். இலக்கியத்துறையில் இறங்கியிருந்தால் பெர்னுட்ஷா மாதிரி ஆயிருப்பார். அரசியலில் தற்போது மேனுட்டில் உள்ளவர் களைவிட சிறந்த ராஜதந்திரியாக இருந்திருப்பார். சமூக சீர்திருத்தத்திலும், பாரமார்த்திகத்திலும் அவருக்கு இணை யெவரு மில்லை என்ற நிலைமையை மிகவும் எளிதில் அவர் அடைந்திருக்கலாம்.

ஆனுல் அவர் அடிமை நாட்டில் பிறந்தமையால் அத்த கைய நிலைமையை அடைய வில்லை. ஆயினும் இந்தியாவின் விடுதலை இயக்கங்களில் மகாத்மா காந்தியின் முக்கிய ஒளி களில் ஒன்ருக இருக்கின்ருர். மகாத்மாவின் உபதேசங்களை நன்ருக அறிந்து அதன்படி நடப்பதிலே தலைசிறந்தவ ரென்று கருதப் படுவதோடு தென்னுட்டு காந்தி என்றும் அழைக்கப் படுகின்ருர். அதுவும் தவிர மகாத்மா காந்தி யுடன் ஆதிமுதல் இதுவரை தோளோடு தோளாக நின்று நாட்டின் விடுதலை இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டு பெருந்தியாகம் செய்திருக்கின்ருர். இத்தகைய நமது ராஜாஜியை நமது தமிழ்நாடு ஈந்து, இந்தியாவுக்கு அளித்த தைக் குறித்து நாம் பெருமை கொள்வோமாக!

22525

18/4/78/L

# தேசியத் தலைவர்களின் சரித்திரங்கள்

(ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதியவை)

அவர்களது வாழ்க்கையில் இன்றுவரை நடந்துள்ள நிகழ்ச்சிகளுடனும், உபதேசங்களுடனும் வெளிவந்துள்ளன. புதிய முறையில் உயர்தரமான பதிப்பு.

**மகாத்மா காந்தி** அணா 6.

வித்வான் டி. பி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M. A. B. L; M. O. L. அவர்களின் சிறப்புரையுடன் கூடியது.

---

**ஜவஹர்லால் நேரு** அணா 6.

சங்கு சுப்பிரமண்யன் சிறப்புரையுடன் கூடியது.

---

**இராஜகோபாலாச்சாரியார்** அணா 6.

ராஜாஜியின் உவமைகளும் இதில் அடங்கியுள்ளன.

---

**கிட்டப்பா பிரசுராலயம்**
செங்கோட்டை. (S. I. R.)